819
1-54.

ஸம்புடம் 13
ஸஞ்சிகை 3

ஸ்ரீ:

விஜய ௵
பங்குனி ௴

819

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0—4—0

வர்ஷச்சந்தா
ரூபாய் 3-0-0

MARCH 1954
VOL 13 NO 3.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 64

2. மங்களபத்ரிகை 70

3. திருப்பாவைக்கதை 71

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O L. திருப்பதி.]

4. அபீதிஸ்தவம் 75

[ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

5. $பத்திரிகைத்தொண்டு 79

[ஸ்ரீ. உப. வேதாந்தவாவதூக, வில்லிவலம் நாராயணாசார்யஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீஅஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

6. ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள் 82

[ஸ்ரீ, உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, வேதாந்தசிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை தலைமை ஆசிரியர், பாதூர்.]

7. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 85

8. செய்திகள் 89

9. சொன்மாலை 90

[ஸ்ரீ. உப. ஒரகடம் ஸுதர்சனாசார்யஸ்வாமி, ரிடையர்டுதமிழாசிரியர், அவளூர்.]

10. பகவதவதாரப்ரயோஜநம் 91

[ஸ்ரீ. உப. வித்வான், அத்தி க்ருஷ்ணமாசார்யஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீஅஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

11. பஞ்சாங்கஸங்க்ரஹம் 94

$[குறிப்பு:— பொதுவாக பத்ரிகைகளைக் குறித்து எழுதப்பட்ட வ்யாஸமேயல்லாது எந்தப் பத்ரிகையைக்குறித்தும் குறை கூறுவதாக யாரும் மனதிற்கொள்ளவேண்டாம்.

ஸம்பாதகர்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } விஜய ௵ பங்குனி ௴ { ஸஞ்சிகை 3

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमोभगवते पुरुषाय तस्मै ॥

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் எனப்படும் நம் ஸித்தாந்தத்தில் இவ்வுலகு லீலாவிபூதி எனக் கூறப்படுகிறது. இதற்கே கர்மபூமி எனவும் பெயர் உண்டு. **'कर्मणा जायते जन्तुः कर्मणैव प्रलीयते'** என்றபடி தன் பூர்வ கர்ம பலத்திற்கு அநுகுணமாகவே இவ்வுலகில் ஶரீரத்தை ஓர் ஜீவன் அடைகிறான். ஸுக்ருத விஶேஷத்தினால் ஓர் ஜீவன் உயர்ந்த பிறவியையும் அடைகிறான். சேதநாசேதநாத்மகமான இவ்வுலகில் நற்காரியங்களின் பயனாக சேதந ரூபத்தையும், அதிலும் ப்ராஹ்மண ஜன்மத்தையும் அடைகிறான். அதேபோல் தான் உலகில் காணப்படும் சதுர்வித வர்ணங்களும் தன் தன் பூர்வ ஜன்ம கர்ம பலத்தால் ஜீவனால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதாக ஆகிறது. **'जन्मना ब्राह्मणो ज्ञेयः'** என்றபடி ப்ராஹ்மண குலத்தில் உதிப்பதே ப்ராஹ்மணனுக்கு உயர்வு என்பதில் ஸந்தேஹமில்லை. இப்படியிருக்க முன் காலத்து நூல்களை நன்கு கற்காமலும், அவைகளின் கருத்துக்களை நன்கு உணரமாட்டாமலும் சிலர் இக்காலத்தில் பிறப்பினாலேயே ஜாதி உண்டாகாதென்றும், அதற்குக்காரணம், ஒருவன்செய்யும்கார்யமோ, அவனுடையகுணமோ ஆகும் என்றும் சொல்லிக்கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். அதுவுமன்றி நாட்டில் உள்ள பொருளாதார சீர்மைக்காக ஜாதி வித்யாஸங்கள் போன்ற பாகுபாடுகளை அறவே ஒழிக்க வேண்டும் என்றும் பல கோஷங்களை நாம் கேட்கிறோம்.

ஒவ்வொரு ஸமூஹத்திலும் பாகுபாடுகள் காணப்படுவது இயல்பே. நம் நாட்டில் ஜாதிப் பிரிவினை என்கிறோம். மற்ற சில நாடுகளில் பொருள் ஸம்பந்தமானதும்; அறிவு ஸம்பந்தமானதுமானபாகுபாடுகளை நாம் காண்கிறோம். ஆப்ரிக்கா போன்றநாடுகளில் மக்களின் வெளித்தோற்றத்தை (நிறத்தை) அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகள் அதிகமாகக் கொண்டாடப்படுகிறது. இப்படி ஒவ்வொரு ஸமூஹத்திலும் வித்யாஸங்கள் இன்றியே ஸமமான நிலை யென்பது ஏற்படுவதே ஸாத்யமில்லை. அரசியலில் ஓர் ஸமமான நிலையை ஏற்படுத்த நாம் முயற்சிக்கலாம். ஆனாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்டமுறையில் ஏற்றத் தாழ்வு இல்லாமல் இருக்கமுடியுமா?

ஜாதி ஸம்பந்தமான கிளர்ச்சிகளும், சச்சரவுகளும் ஸமீப காலத்தில்தான் அதிகரித்து வருகின்றன. முற்காலத்தில் ஜாதித்வேஷிகள் இருந்தார்கள்என்றாலும், ஏதோ ஒரு சிலரே. ஆனால் நாளுக்கு நாள்தான் வ்ருத்தி யடைந்து வருகிறது. இதற்குக் காரணம் என்ன என்று நாம் யோசித்தல் அவசியம். பொருளாதார அடிப்படைதான் முதல் காரணம். நாட்டில் வறுமை அதிகரித்தால், ஸுகமாக ஜீவிப்பவனை தூஷிப்பது இயல்பே. மற்றொரு காரணம் நம்மிடம் உள்ள கடமைக் குறைவே. ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் காலத்தில் நம் ஸம்ப்ரதாயத்திலும் தர்மாநுஷ்டாநங்களிலும் எவ்வளவு நம்பிக்கையும் ச்ரத்தையும் இருந்ததோ அதில் பன்மடங்கு தத்காலம் ச்ரத்தை குறைந்துபோய்விட்டது. 'ஆசையை ஒழித்தவனுக்கு அதிகாரிகள் த்ருணங்கள் போன்றவர்களே' என்ற கருத்தைக் கொண்டே ஓர் புராண கவி **'निरीहाणां ईशः तृणमिव तिरस्कारविषयः'** என்

ளூர். ஸ்வாமி ஸ்ரீ தேசிகனும் வைராக்ய பஞ்சகத்தில் **'देवंसेवितुमेव निश्चिनुमहे'** என்று பகவத்கைங்கர்யமே தனக்கு முக்யமானதென்றும் மற்றெல்லா விருப்பங்களையும் விலக்கிவிட்டதாகவும் மிகத் தெளிவாக எடுத்துரைத்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

ஆகரத்திலிருந்து எடுத்தவுடன் ஓர் ரத்னமானது அழுக்குடனேயே காணப்படுகிறது. அதை சுத்தி செய்து, சாணைபிடித்து, பட்டை தீட்டியவுடன் தானே அது தன் ஒளிக் கிரணங்களை வெளிவிடுகிறது. அதே போல் ப்ராஹ்மணனாக ஜனித்த ஒவ்வொருவனும் **'संस्कारैर्द्विज उच्यते'** என்று ஜாதகர்ம, உபநயனாதிகளால் அழகிய த்விஜனாகிறான். அதற்கநுகுணமாகவே வித்யாப்யாஸம் செய்து, கர்மாநுஷ்டாநபரனாகி தேஜஸ்ஸுடன் விளங்குகிறான். சாணையில் தீட்டப்படாமற்போனாலும் ரத்னம் எப்படி ரத்னமாகவே இருக்குமோ அதேபோல் கர்மரஹிதனான ப்ராஹ்மணனும், அப்ராஹ்மணனாகி விடமாட்டான். தனக்கு ஏற்பட்ட நித்ய நைமித்திக கார்யங்களைச்செய்யவேண்டியவனாக ஆவான். அப்பேர்ப்பட்டவர்களை பதிதர்கள் என்கிறோம். பதிதர்களுக்கு ப்ராயச்சித்தமுண்டு. தங்களை சீர்திருத்திக் கொள்ளமுடியும். பதிதர் என்ற காரணத்தைக் கூறி அதிலிருந்து மீட்சியில்லாமல் செய்யும்படி ஶாஸ்த்ரங்கள் கூறவில்லை. ஆனதுபற்றி அவர்களுக்கும் உயர் நிலைவர ஸௌகர்யங்கள் உண்டுதான்.

இது போலவே கடமையிலிருந்து விலகிய ப்ராஹ்மணர்களும் தங்களுக்கென்று ஏற்பட்ட கடமைகளை மனத்திற் கொள்ளவேண்டும். பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட கற்கள்—ரத்னங்கள் ரத்னங்களான போதிலும் அதே நிலையில் உபயோகிக்கப்படுகின்றனவா? கிடையாது. சாணை தீட்டி, ஜ்வலிப்புடன் விளங்கும்படி செய்யப்பட்ட பின்னரே அவைகளை அதிகமாக ஜனங்கள் மதிக்கிறார்கள். விலைமதிப்பற்ற மாணிக்கங்களாகின்றன. அதேபோல் ஒவ்வொரு ப்ராஹ்மணனும் தனக்கு ஏற்பட்ட நித்ய, நைமித்திக கர்மங்களை ஸரிவர செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு உலகில் மதிப்பு உண்டாகும். ஜன்மத்தினாலேயே உயர்ந்தவன் என்றுஇருமாப்புடனிருந்தால், உலகில் கௌரவம் ஏற்பட்டுவிடாது. ஸதாசார சீலர்கள் எக்காலத்திலும் எல்லோராலும் பஹுமானிக்கப்படுகிறார்கள். ஆதலால் நாம் எல்லோரும் நமக்கு ஏற்பட்ட நித்ய, நைமித்திக கார்யங்களைச் செய்வதில் குறைவு ஏற்படும்படி விடக்கூடாது. நிற்க, பதிதனாகியப்ராஹ்மணனும் மறுபடியும் ச்ரோத்ரியன் என்ற உயர் நிலையை அடையமுடியாது. உயர்ந்த ரத்னங்கள் உடைந்துபோனால் தங்கள் மதிப்பை இழக்கின்றனவல்லவா? மறுபடியும் சாணை தீட்டி, பரிஷ்கரிக்கப்பட்டாலும், முன் போன்ற உயர்ந்த மதிப்பைப் பெறமுடியுமா? சிறிய ரத்னமாக விளங்கலாம். அதேபோல்தான் உயர் நிலையிலிருந்து வழுவிய ப்ராஹ்மணனும், எவ்வளவு சீர்திருத்தத்தை அடைந்தாலும், முன்போன்ற நிலையை அடைவது ச்ரமஸாத்யமே. ஆதலால் நாமும் நமக்கு ஏற்பட்ட ஸதாசாரங்களைக் கைவிடாமல் உயர் நிலையில் இருப்பதற்கே முயற்சிக்கவேண்டும்.

* * * * * * * * * *

ஸ்ரீ அஹோபிலமடத்தின் புதுக்கல்வித்திட்டம்.

நம் நாட்டில் ப்ராஹ்மணீயம் பாதுகாக்கப்படவேண்டியது மிகவுமவச்யம், அவஸரமும் கூட என்பதை நன்குணர்ந்தநமது ஸ்ரீ ஸந்நிதியில்மூர்த்தாபிஷிக்தராய்எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஶடகோபஸ்ரீவீரராகவ ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் சென்ற ஸம்வத்ஸரத்தில் நம் ஸமூஹத்திலுள்ள சிறுவர்களை சீர்திருத்த வேண்டி பல விடங்களில் பாடசாலைகளை ஏற்படுத்தத் திருவுள்ளம் பற்றியாயிற்று. ஸகல இந்துக்களும், அதிலும் விசேஷமாக ப்ராஹ்மணர்களுக்கென்று கருதப்பட்ட சில முக்யமான தர்மங்களை உடனுக்குடன் நிலைநிறுத்த முயற்சி செய்யவேண்டும் என்பது ஸ்ரீமதழகியசிங்கரின் திருவுள்ளம். (விளை

..ம் பயிர் முளையிலே' என்ற பழமொழிக்கு ஒப்ப சிறு பிராயத்திலேயே ஸதாசாரங்களை கற்றுக்கொடுத்தால் நமது ஸமூஹத்திலுள்ள சிறுவர்கள் ஸதாசார சீலர்களாக ஆகலாம். என்று பல விடங்களிலும் பாடசாலைகள் ஏற்படுத்தி, அதில் ஸாதாரண கல்வி போதிப்பதுடன் மதஸம்பந்தமான கோட்பாடுகளையும் போதிக்க திட்டமிடப்பட்டது. இதற்காக சில பெரியோர்களின் உத்ஸாஹத்தால் சென்னை (தியாகராயநகர்) (தென்னாற்காடு ஜில்லா) 'பாதூர் கிராமம்' என்ற இரண்டு இடங்களிலும், ஏற்கனவேயே பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நன்கு நடந்து வருகின்றன. சென்னை பாடசாலையில் ஸுமாராக பிள்ளைகள் சேர்ந்திருக்கிறார்கள். என்றாலும், ஒர் பெரிய நகரத்திற்கேற்ப பிள்ளைகள் சேர்ந்துவிட்டதாகக் கூறமுடியாது. பெற்றோர்களின் ஆதரவு குறைவு என்றே கூறவேண்டியிருக்கிறது. இப்பாடசாலைகளில் மற்றைய பாடசாலைகளைப் போல் எல்லாப்பாடங்களும் நடத்தப்படுகின்றன என்பது மட்டுமல்ல. விசேஷமாக பகவத்ஸ்தோத்ரபாடங்களும், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி முதலிய பாடங்களும் போதிக்கப்படுகின்றன. இதேமாதிரி இன்னும் பல க்ராமங்களிலும், நகரங்களிலும் பாடசாலைகள் ஏற்படுத்த ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றியாயிருக்கிறது. அதற்கநுகுணமாக நமது ஸமூஹத்தில் உள்ள பெரியவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு ஆங்காங்கு சிறியபாடசாலைகள் ஏற்படுத்த முன்வந்தார்களானால் ஸ்ரீ அஹோபிலமடத்தில் அதற்கு வேண்டிய மற்றைய ஸௌகர்யங்களைச் செய்து கொடுப்பார்கள். முக்யமாக அவர்கள் கவனிக்கவேண்டியது ஒன்று. அதாவது நம்முன்னோர்கள் ஒப்புக்கொண்ட ஸதாசாரங்களை நாம் அநுஷ்டிப்பவர்களாகவும், நமது சிறுவர்களுக்கும் அதில் நம்பிக்கை ஊட்டுகிறவர்களாகவும் இருத்தல் வேண்டும். மதக்கல்வியையும், ஸம்ஸ்க்ருதபோதனையையும் மடாதிபதிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லிவரும் அரசாங்க அதிகாரிகளும் இவ்விஷயங்களை நன்கு பரிசீலித்து ஸ்ரீ அஹோபிலமடம் ஆரம்பித்திருக்கும் கல்வி போதனைக்கு மிகவும் அவச்யமான வசதிகளைச் செய்துதரவேண்டும். பொருள் உதவியை எதிர்ப்பார்க்காமல் போனாலும், சில விதமான அநுமதிகளை நாம் எதிர்பார்ப்போம். இவ்விதமான கல்விமுறைகள் அரசாங்கத்திற்குப் புறம்பானதாகவில்லை என்பது நிச்சயம். தத்கால அரசாங்கத்தார் எவ்விதமாக பாடதிட்டங்கள் (கீழ் திசைக் கல்வி முறையில்) அமைத்திருக்கிறார்களோ அதைப் பின்பற்றியேதான் நாமும் பாடதிட்டங்கள் வகுத்திருக்கிறோம். ஆனதுபற்றி அரசாங்கத்தார்களும் நம்மடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள் நன்கு நடத்தப்படுகின்றன. இதை உதாரணமாகக்கொண்டு மற்றைய ஸ்தாபனங்களும் ஆரம்பிக்கலாம். இதற்கு அரசாங்கத்தின் பூரண ஆதரவு உண்டு என்று தங்களுடைய சொற்பொழிவில் கூறுவார்களேயாகில், பொதுஜனங்கள் விஷயங்களை நன்கு அறிந்து கொண்டு வேண்டிய ஆதரவுகளையும் செய்வார்கள் என்பதில்ஸந்தேஹமில்லை. சொல்வதைச் செயலில் காட்டுவது மிகவும் ச்லாக்யமானதல்லவா. அதற்காகத்தான் நாமும் பாடுபடுகிறோம்.

* * * * * * * * * * *

ஸ்ரீமதழகியசிங்கரின் ஸஞ்சாரம்.

கோயம்புத்தூரில் ஸ்ரீ மதழகியசிங்கர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42—வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்திரமஹோத்ஸவத்தையும், அது ஸமயம்மாலோல வித்வத்ஸபையையும் வெகு விமர்சையாக நடத்திவிட்டு சிங்காநல்லூர் எழுந்தருளியிருந்து அங்கிருந்து மறுபடியும் கோயம்புத்தூர் எழுந்தருளியாயிற்று. பிறகு பாலக்காடு முனிஸிபாலிடியில் உள்ள பள்ளிபுரம், திருநெல்லாய் (திருவாளக்கடவு) சந்திரசேகரபுரம் முதலிய இடங்களுக்கு எழுந்தருளியாயிற்று. பள்ளிபுர அக்ரஹாரத்தில் ஸுமார் 20 தினங்கள்

எழுந்தருளியிருந்தாயிற்று. 42—வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் முதல் வர்ஷாராதனம் பள்ளிபுர அக்ரஹாரத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஒரு வாரம் முன் ஸேவை, பாராயணங்கள் முதலியவைகளுடன் உபக்ரமிக்கப்பட்ட வர்ஷாராதனம் அத்யாச்சர்யமாக நடந்தேறியது.

பல ஆண்டுகளாக அப்பக்கமே ஸ்ரீ அழகியசிங்கர்கள் எழுந்தருளாததால் அப்பக்கத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும், ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களும் இது ஸமயம் மிகுந்த ஸந்தோஷத்துடனிருந்து ஸ்ரீ அழகியசிங்கரை பல காலும் தெண்டனிட்டு, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன், கண்ணன் முதலியவர்களை ஸேவித்து ஆநந்தத்தையடைந்தார்கள். அங்கிருந்து ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரத்தை உபக்ரமித்து ஆழ்வார்களால் மங்களாஶாஸனம் செய்யப்பட்ட திருவித்துவக்கோட்டுக்கு எழுந்தருளி அங்கு மங்களாஶாஸனம் செய்துவிட்டு குருவாயூர் எழுந்தருளினர். கொச்சி ஸமஸ்தானத்தில் பரம்பரையாக அரசாண்டுவந்த மஹாராஜாக்கள் ஸம்ஸ்க்ருத பாஷையில் பெரிய பண்டிதர்களாகவும், வைதிக ச்ரத்தை உள்ளவர்களாகவும் இருந்துவந்திருக்கிறார்கள். பல மஹாராஜாக்கள் ந்யாய, வ்யாகரணாதி ஶாஸ்த்ரங்களிலும் ப்ராவீண்யமடைந்தவர்கள். அப்பேர்ப்பட்ட ஜ்ஞாந, வயோவ்ருத்தர்களான மஹாராஜாக்கள் நம் ஸ்ரீமதழகியசிங்கர் போன்ற மஹான்களை மிகவும் கௌரவமாக எதிர்கொண்டழைத்து பூஜிப்பார்கள் என்பது நாம் எதிர்ப்பார்த்ததே. அதே போல கொச்சி மஹாராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீ அழகியசிங்கர் கொச்சி மஹாராஜாவின் அரண்மனைக்கு எழுந்தருளியாகும் எனத் தகவல் கிடைத்துள்ளது.

* * * * * * * * * *

பாலக்காடு அக்ரஹாரத்தில் வெகு விமர்சையாக இவ்வர்ஷாராதநம் நடைபெற்றது. இதேபோல் ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ருந்தாவனம் ஏற்பட்டுள்ள திருவுள்ளூரிலும் ஐந்து நாள் வேத, ப்ரபந்த பாராயணங்களுடன் வர்ஷாராதனம் நடைபெற்றது. மதுராந்தகம் ஸ்ரீ மதஹோபில மடத்திலும் அவ்வூர் ஸ்ரீஸந்நிதி ஸம்ஸ்க்ருத கலாசாலையில் உள்ள கைங்கர்யபரர்களின் உத்ஸாஹத்தால் முதல் நாள் காலை, மாலைகளிலும் வேத, ப்ரபந்த, ஸம்ப்ரதாய க்ரந்தங்களின் பாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டு வர்ஷாராதனத்தன்று விசேஷமாக சாற்றுமுறை நடந்தேறியது. இதே போல ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேசங்களிலுள்ள ஸ்ரீ அஹோபிலமடங்களிலும் முதல் வர்ஷாராதனம் மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டிருக்கிற தென்ற ஸமாசாரம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீ ரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் முதல் வர்ஷாராதனம்.

* * * * * * * * * *

'குலம் தரும் செல்வம் தந்திடும்' என்று ஆழ்வார் அநுஸந்திப்பது போல் முன் ஜன்ம பாக்ய விசேஷத்தால் நற்குலப்ரஸூதி இவ்வுலகில் ஒருவருக்கு ஏற்படுகிறது. குலத்திற்கேற்ப ஒருவருக்கு நற்குணங்களும் ஒழுக்கமும், ஶாஸ்த்ரஜன்ய ஜ்ஞாநமும் ஏற்படுகிறது.

மஹான்களின் மறைவு.

இம்மாதிரியானமஹனீயர்களில் அந்யதமர் ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி. அந்த ஸ்வாமியின் திருக்குமாரரான ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி ஸமீபத்தில் பரமபதித்ததைக் கேட்டு நாம் வருந்துகிறோம். நற்குலத்தில் பிறந்து வைதிக மார்க்கத்தைப் பின்பற்றி வேதாத்யயனம் செய்து ஶாஸ்த்ராப்யாஸமும், வேதாந்தக்ரந்தங்களை க்ரமேண காலக்ஷேபமும் செய்து பாஞ்சராத்ராகமத்தில் நல்ல ப்ராவீண்யம் ஸம்பாதித்து மதுராந்தகத்தில் பல காலம் எழுந்தருளியிருந்தார். ஒரு ஸமயம் ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் ஓர் வேத பாடசாலையையும் நடத்தினர். மதுராந்தகத்தில் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி தேவஸ்தான உத்ஸவாதிகளில் இந்த ஸ்வாமி எடுத்துக்கொண்ட பங்கு கணக்கிட

முடியாது. ஸ்வாமார் இருவருஷகாலம் மதுராந்தகம் ஸ்ரீ மதஹோபிலமடம் வேத, ப்ரபந்த, ஶாஸ்த்ரபாடசாலையில் ஸ்ரீ கோசாலயாத்யக்ஷராகவும்எழுந்தருளியிருந்தார். பலகாலம் இந்த ஸ்வாமி எழுந்தருளியிருந்து பலபகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தால் நாம் எல்லோரும் ஸந்தோஷிக்கும்படி இருக்கும். அப்படியில்லாமல் இந்த ஸ்வாமி திடீரென்று பரமபதித்தார் என்பது நம்முடைய தௌர்பாக்யமே.

'ஸ்ரீ தேசிகதர்ஶன ரத்னதீப' மென்ற பிருதைப் பெற்ற ஸ்ரீ உப. வி. வி. ஸ்ரீநிவாஸஐயங்கார்ஸ்வாமி பரமபதித்துவிட்டார் என்பதை மிகுந்த க்லேஶத்துடன் நாம் கேட்க நேர்ந்தது. நமக்கெல்லாம் ஜ்ஞாபகம் தெரிந்ததுமுதல்ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்திற்காகவும், ஸம்ஸ்க்ருத பாஷாபிவ்ருத்திக்காகவும் இந்த ஸ்வாமி அதிக பாடுபட்டவர். வைதிகப் பற்றென்பது இந்த ஸ்வாமியிடம் குடியிருந்தது. வைதிக கர்மங்களிலும், வைதிகர்களிடமும் அதிக விச்வாஸத்தைக்காட்டி வந்தவர் இந்த ஸ்வாமி. ஸ்ரீதேசிக தர்சனம் நன்கு புலனாக ஓர் முக்யதீபத்தையே இழந்ததாகக் கூட நாம் சொல்லமுடியும். இந்த ஸ்வாமி அதிதிகளிடம் காட்டும் ஓர் பரிவும், உத்ஸாஹமும் வேறு இடத்தில் பார்பதரிது. ஸ்ரீ தேசிகன் க்ருந்தங்களில் ஆழ்ந்தஜ்ஞானத்தைப் பெற்றிருப்பதுடன், புதுப்புது கருத்துக்களை வெகு அழகாக நமக்கு எடுத்துரைத்துக்கொண்டேயிருப்பார். ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை ஸ்தாபனம் ஆனதுமுதல் இதுவரை இந்த ஸ்வாமி அக்கலாசாலையின் அபிவ்ருத்தியிலேயே நோக்குடையவராக எழுந்தருளியிருந்தார் என்பது மிகையாகாது. பொதுவாக இந்த ஸ்வாமியின் குணாதிசயங்களைப்பற்றி பூர்த்தியாக நாம் கூறிவிடமுடியாது. வைதிகப்பற்று குறைந்துவரும் இந்நாளில் இந்த ஸ்வாமி போன்றவர்கள் இருந்தால் வைதிக ஸ்ரீ மறையாமலேயே இருந்து வந்தது. ஆதலால் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திற்கே இந்த ஸ்வாமியின் மறைவு மிகவும் வருந்தத்தக்க விஷயமே.

சென்னை சைதாப்பேட்டையில் ஸமீபகாலம்வரை வஸித்துவந்த லாலாப்பேட்டை ஸ்ரீ பி. எம். ஸுந்தரவரதாசார் ஸமீப காலத்தில் காலமான செய்தி நம்மை திடுக்கிடச் செய்தது. இந்த ஸ்வாமி சிறுவயதிலேயே வைதிகச்ரத்தையுள்ளவராகவும், ஸ்ரீ ஸந்நிதியில் அதிகப் பற்றுள்ளவராகவும் இருந்தார். தன் முயற்சியாலேயே ஸம்பாதிக்கப்பட்ட ஐச்வர்யத்தில் அதிக அளவு ஸத் விஷயங்களுக்காகவே முகமலர்ச்சியுடன் செலவு செய்து வந்தாரென்பது அன்னாரின் ஸ்நேகிதர்களுக்கு நன்கு தெரியும். அந்த ஸ்வாமியின் மறைவினால் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் பக்தர்களில் ஓர் உயர்ந்த ரத்னத்தை இழந்தோம் என்று நாம் வருந்துகிறோம்.

*   *   *   *   *   *   *

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா நிர்வாஹம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவிற்கு சந்தா செலுத்திய ஸ்வாமிகளுக்கு தொகைக்காக தனிப்பட்ட ரசீது அனுப்பப்பட்டுவந்ததை நிறுத்திவிட்டு முன்போலவே ஸஞ்சிகையின் முடிவில் சந்தாசெலுத்தியஸ்வாமிகளின் நம்பர் பெயர் முதலியவைகளை ப்ரசுரிக்கத்தீர்மானித்துள்ளோம். 1954 ஞ ஜனவரிமாதத்திற்கும் பிறகும் சந்தா செலுத்தியவர்களின்விபரங்கள் அடுத்த ஸஞ்சிகைமுதல் ப்ரசுரிக்கப்படும்.

விஷயதானம் செய்யும் ஸ்வாமிகளில் சிலர் தங்கள் வ்யாஸங்கள் உடனுக்குடன் ப்ரசுரமாகவில்லை என்று வருத்தத்துடன் எழுதி வருகிறார்கள். அவகாசக்குறைவினால் வ்யாஸங்கள் எல்லாம் உடனுக்குடன் ப்ரசுரிக்கப்படவில்லை. இந்நிலையை உணர்ந்து அந்த ஸ்வாமிகள் பொறுத்துக்கொள்ளும்படிப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

*   *   *   *   *   *   *   *   *   *

ஸ்ரீ மதஹோபிலமடத்தின் ஸ்தாபகரான ஸ்ரீ மதாதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் திருவவதாரஸ்தலத்தில் ஸ்ரீ மதாதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் ப்ருந்தாவனம் நவீன முறைப்படி சீர்படுத்திவைக்க வேண்டிய அவச்யக்

ஸ்ரீமதழகியசிங்கரின் கைப் பற்றி பக்தப்ரதிஷ்டாபநங்கள். முன்னொருதரம் நாம் ஜ்ஞாபகப்படுத்தியது நமது வாசகர்களுக்கு ஜ்ஞாபகமிருக்கும். ஸ்ரீ மதழகிய சிங்கர் கார்த்திகை மாதத்தில் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருந்த ஸமயத்தில் சிஷ்யர்களில் பலருக்கு ஸ்ரீ மதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் ப்ருந்தாவனத்தை நேரில் ஸேவிக்கும் பாக்யம் கிடைத்தது. நவீன காலத்தில் ஆசார்யர்களுடைய ப்ருந்தாவனங்கள் சிறிய தேவாலயங்கள்போல் கட்டப்பட்டு விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதைக் கண்ணுற்ற ஸ்வாமிகள் ப்ராசீனரீதியில் ஆனால் மிகவும் ச்ரத்தையுடனேயே காப்பாற்றப்பட்டு ப்ருந்தாவநங்களை நன்கு கவனிக்காமல் இருந்துவருவதாக புகார்செய்து கொண்டிருந்தார்கள். இது விஷயத்தைத்தான் நாம் முன் ஒருதரம் விவரிக்கும்படி நேர்ந்தது. தத்காலம் ஸ்ரீமதஹோபிலமடத்தில் மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திவ்ய நியமனத்தின் பேரில் ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன், அதன் ஸமீபத்திலுள்ள இரண்டாவது பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கர் ப்ருந்தாவனம் இரண்டையும் ஸுமார் 4000 ரூபாய் செலவில் ஸந்நிதியிலேயே புதுப்பித்தார்கள். தத்கால ரீதியை அநுஸரித்தே இந்த ப்ருந்தாவனங்களில் மூலவ உத்ஸவ விக்ரஹங்களும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டன. இதற்கு முன்னும் ப்ரதிஸம்வத்ஸரம் திருநாராயணபுரத்தில்செல்வப்பிள்ளை ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன் ப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளுவது வழக்கம். தை மீ முடிவில் பாராயணாதிகள் உபக்ரமிக்கப்பட்டு மாசி மீ 1உ வெகு விமர்சையாக ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ப்ருந்தாவனத்திலும், இரண்டாவது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ப்ருந்தாவனத்திலும் ஸம்ப்ரோக்ஷணங்கள் நடந்தேறின. அது ஸமயம் திருநாராயணபுரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செல்வப்பிள்ளையும், ஸ்ரீ பாஷ்யகாரரும் ப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளி, ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு மரியாதைகள் பண்ணி கோஷ்டி விநியோகங்கள் நடந்தபின்னர் கோயிலுக்கு எழுந்தருளினார்கள். பல காலமாய் சிஷ்யர்கள் மனோரதித்து வந்ததை **'इङ्गितज्ञास्तु कोसलाः'** என்றபடி நம் ஸ்ரீ மதழகியசிங்கர் நன்குணர்ந்து இந்தப் பேருதவியை நமக்கு அநுக்ரஹித்தருளினார்.

இவைகள் தவிர ஸ்ரீமதஹோபிலமடத்தின் மூலபூதரான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்ரீ அஹோபிலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருப்பதை அடிக்கடி சிஷ்யர்கள் நேரில் சென்று ஸேவித்துவரும் பாக்யம் கிடைக்க வேணுமென்றும் அதற்கு உதவியாக சடப்பையில் ஸமீபத்தில் ஸ்ரீமதழகியசிங்கர் ஓர் மடத்தை ஏற்படுத்தியாயிற்று. அந்தமடத்திலும், ப்ராசீனமான மைஸூர் ஸ்ரீ அஹோபிலமடத்திலும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ மதாதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன் முதலியவர்களின் பிம்பங்கள் ப்ரதிஷ்டை செய்யும்படி ஸ்ரீ நியமனமாய் வெகு விமர்சையாக ஸம்ப்ரோக்ஷணங்கள் கார்த்திகை மாதத்தில் நடந்தேறின.

மேலே கூறப்பட்டுள்ள ஸம்ப்ரோக்ஷணங்களெல்லாம் ஸ்ரீமதழகியசிங்கரின் பரம க்ருபையாலே நியமிக்கப்பட்டு ஸ்ரீ ஸந்நிதியில் பல வர்ஷங்களாக கைங்கர்யம் செய்துவருபவரும் பாஞ்சராத்ரத்தில் நல்ல அநுபவத்தைப் பெற்றவருமான ஸ்ரீ. உப. மன்னார்குடி கஸ்தூரி ரங்காச்சார் ஸ்வாமியால் நடத்தப்பட்டன. இன்னும் டி. நரஸப்பூர், கரியாப்பட்டணம் முதலியவிடங்களிலுள்ள அஹோபிலமடங்களிலும் ஸம்ப்ரோக்ஷணங்கள் நடக்கப்போவதாக நாம் கேள்விப்படுகிறோம். நம்போன்ற சிஷ்யர்களுக்கெல்லாம் ஒரு பாக்ய காலம் ஏற்பட்டிருப்பதைக் குறித்து நாம் எல்லோரும் ஸந்தோஷிக்கிறோம்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑌮𑌠𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌪𑌟𑍍𑌟𑌮𑌲𑌙𑍍𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌵𑌣𑍍 𑌶𑌠𑌕𑍋𑌪
𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌕𑍋𑌪 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌨𑌾𑌂 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌾

𑌮𑌙𑍍𑌗𑌲𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾

𑌭𑍋𑌃 𑌶𑍍𑌰𑍀𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌚𑌰𑌣𑌾𑌃!

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌦𑌮𑌾𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌨𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌮𑌹𑌂𑌸𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍋𑌭𑌯𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌨𑌿𑌰𑍍𑌧𑌾𑌰𑌣𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌦𑌿𑌵𑍍𑌯𑌪𑌾𑌦𑍁𑌕𑌾𑌸𑍇𑌵𑌨𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌹𑍋𑌬𑌿𑌲𑌮𑌠𑍀𑌯𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑌲𑌙𑍍𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 [illegible] 𑌚𑌿𑌰𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌨 𑌸𑍍𑌵𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑍇𑌨 𑌸𑌨𑌾𑌥𑌯𑌤𑌾𑌂 𑌅𑌨𑍍𑌤𑍇𑌵𑌾𑌸𑌿𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌨𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌭𑌾𑌜𑌨𑌞𑍍𑌚 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 [illegible] 𑌵𑌿𑌜𑌯𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 [illegible] 𑌨𑌿𑌜𑌵𑌿𑌜𑌯𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌮𑌲𑌙𑍍𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌵𑌣𑍍𑌶𑌠𑌕𑍋𑌪𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌕𑍋𑌪𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌨𑌾𑌂 𑌤𑌤𑍍𑌰𑌭𑌵𑌤𑌾𑌂 𑌭𑌵𑌤𑌾𑌂 𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 𑌶𑌿𑌰𑌸𑍍𑌯𑌵𑌤𑌂𑌸𑌯𑌨𑍍𑌤𑌃 [illegible] 𑌅𑌨𑍍𑌤𑍇𑌵𑌾𑌸𑌿𑌨𑍋 𑌵𑌯𑌮𑍀𑌦𑍃𑌶𑌂 [illegible] 𑌮𑌙𑍍𑌗𑌲𑌪𑌤𑍍𑌰𑌂 𑌸𑌾𑌦𑌰𑌂 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌨𑍍𑌤𑌃 [illegible]॥

[illegible] 𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 [illegible]। [illegible] 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 [illegible] 𑌇𑌤𑌿 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑍀𑌤𑌿𑌃। 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑌮𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌾𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌯𑍋𑌃 [illegible] 𑌯𑌥𑌾𑌮𑌤𑌿 [illegible] 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 [illegible] 𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 [illegible], 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 [illegible]॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑍋 𑌹𑌿 𑌲𑍋𑌕𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌨𑌿𑌷𑍍𑌣𑌾𑌤𑌾𑌃 𑌨 𑌕𑍇𑌵𑌲𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑌾𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃। 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 [illegible] 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍀𑌤𑌿𑌹𑌾𑌸 [illegible] 𑌭𑌾𑌰𑌤𑌵𑌰𑍍𑌷𑌜𑍀𑌵𑌾𑌤𑌵𑍋𑌽𑌤𑍍𑌰 [illegible]॥

𑌭𑌾𑌰𑌤𑌵𑌰𑍍𑌷𑌂 𑌹𑌿 𑌬𑌹𑍋𑌃 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍇𑌵 𑌮𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑍁𑌯𑌾𑌯𑌿𑌭𑌿𑌃 𑌸𑌮𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑌪𑌿 𑌯𑌥𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌾𑌲𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌤𑍀𑌰𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍇𑌵 ‘𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤। 𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍॥ 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍। 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌮𑍍𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇॥’’ 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌜𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍁𑌰𑍋𑌧𑌂 𑌰𑌕𑍍𑌷𑌤𑍀𑌤𑌿 𑌬𑌹𑍁𑌶 𑌏𑌵 𑌵𑌯𑌮𑌿𑌤𑌿𑌹𑌾𑌸𑌤𑍋 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌮𑌃॥

𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌮𑌪𑌿 𑌭𑌾𑌰𑌤𑌵𑌰𑍍𑌷𑌮𑌿𑌦𑌂 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍇𑌵 [illegible] 𑌕𑌥𑌂 𑌵𑌾 𑌰𑌕𑍍𑌷𑌿𑌷𑍍𑌯𑌤𑌿? 𑌇𑌤𑌿 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌯𑌾𑌂 [illegible] 𑌧𑌰𑍍𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌰𑌕𑍍𑌷𑌣𑍈𑌕𑍋𑌤𑍍𑌸𑌾𑌹𑌕𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌧𑌿𑌯𑌾 [illegible]

ஸ்ரீ:

ஸ்ரீஅஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஸடகோப ஸ்ரீவீரராகவஸடகோபயதீந்த்ரமஹாதேசிகனுடைய திவ்யஸந்நிதியில் ஸமர்ப்பிக்கப்பட்ட மங்களபத்திரிகை

தலை சிறந்த ஜகதாசார்யர்களே!

திருவுடன் பொருந்தியவரும், மறையுரைக்கும் நெறியை நிலைநாட்டுகிறவரும், எல்லா நூல்களில் வல்லவரும், விசேஷமாக ஸ்ரீராமாநுஜதர்சனத்தைப் பாதுகாப்பவரும், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் திருவடி நிலைகளையே ஸேவித்துக்கொண்டிருப்பவரும், நம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருப்பவரும், வெகுகாலமாக இங்குள்ளவர்களால் ஆவலுடன் எதிர்ப்பார்க்கப்பட்ட தம்முடைய விஜயத்தினால் இவ்வக்ரஹாரத்தை க்ருதார்த்தமாகச்செய்கிறவரும், ஸ்ரீஸந்நிதிசிஷ்யர்களான அடியோங்களை தம்மநுக்ரஹத்திற்கு இலக்காக்கிக்கொள்கிறவரும், விசேஷித்து இவ்விஜயவருஷத்தில் கோளப்ரதேசத்தையே தம்முடைய விஜயத்தால் அலங்கரிப்பவரும், நம்மாசார்யனுமாகிய ஸ்ரீவண்ஸடகோப ஸ்ரீவீரராகவஸடகோபயதீந்த்ர மஹாதேசிகனாகிய தேவரீர்களுடைய திருவடித்தாமரைகளை முடிகளிற்சூடி 'பள்ளிபுரம்' என்கிற அக்ரஹாரத்தில் வஸிக்கும் சிஷ்யர்களான நாங்கள் மிகுந்த உவகையுடன் இம்மங்களபத்திரத்தை விநயத்துடன் ஸமர்ப்பிக்கிறோம்.

தங்களுடைய வரவு எங்களுக்குமட்டுமின்றி பாரததேசத்தில் தோன்றி மிகப் பழைய அறத்தின் நெறியே ஒழுகவிரும்பும் வர்ணம், ஆச்ரமம் என்ற பாகுபாட்டையுடைய யாவர்க்கும் நன்மை பயக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. திருவுடன் பொருந்தியவர்களும், பூஜைக்குரியவர்களாயுமுள்ள ஆசார்யர்களான தங்களின் திருவடித்தாமரைகளை வணங்கி வழிபட்டு நல்வரவு கூறி விருந்தோம்புதல் முதலிய அறங்களைச் செய்வதற்குத் தகுந்த காலத்தை நாங்கள் பெற்றிருக்கிறோம். இதனால் நாங்கள் எங்களைமட்டுமின்றி எங்கள் வம்சத்துள்ளோர் யாவரையும், அல்லது கோளதேசத்துள்ளோர் யாவரையுமே தந்யர்களாகக்கருதுகிறோம்.

திருவிரும்பிவாழ்பவரும் உலகத்துள்ளோரைக்காட்டிலும் மேம்பட்டவராயும் ஸர்வகலைகளிலும் வல்லவரும், அறங்களை போதிப்பதால்மட்டுமின்றி தன் ஒழுக்கத்தாலும் நிலைபெறச்செய்கிறவரும் இப்பாரதவருஷத்திற்கு இன்றியமையாதவராயுமிருக்கிற (ஸ்ரீ அழகியசிங்காகிய) தாங்கள் இத்தன்மைத்தாகிய பரமாத்மாவையே நினைப்பூட்டுகிறீர்கள்.

இப்பாரதபூமி வெவ்வேறு கொள்கைகளையுடைய மதாசாரியர்களால் நலிவுற்றபோதும் தகுந்தகாலங்களில் 'அறம் மடிந்து மறம் ஓங்கும் காலங்களில் நான் அவதரிக்கிறேன்' 'அறநெறி ஒழுகும் அன்பர்களைக் காக்கவும், பிறநெறி இழிந்தோர்களை மாய்க்கவும் யுகந்தோறும் அவதரிக்கிறேன்' என்று நூல்களிற் கூறப்பட்ட தன் ஆணையின் வயத்தனாய் அவதரித்து அறநெறிகளைக் காக்கின்றான் என்று இதிஹாஸங்களின்மூலம் கேட்டிருக்கிறோம்.

இப்பொழுதும் இப்பாரதபூமிவாழ்மானிடர்கள் வெவ்வேறுமதாசாரியர்களால்கண்டபடி போதிக்கப்பட்டு தங்களுடைய தருமங்களை இழந்து நிற்குமிந்நிலையில் இவர்களுக்குண்

पूर्वेण सर्वेषां भारतीयानां निजकर्तव्योपदेशेन च लोकानां जीव-
क्षयात् [illegible] इति यद्रक्षाव्यवसाये
भगवानेव जागरूक इति साक्ष्यं वहथः । [illegible]
[illegible] ‘[illegible]
[illegible]’’ इत्यार्षायां [illegible]
[illegible] जीवति ॥

अन्ततो वयं शिष्याः [illegible] श्रीमतां [illegible] शरीरस्यारोग्य [illegible] भगवन्तं श्रीलक्ष्मीनारायणं श्रीगोपालकृष्णं च सन्ततं सम्प्रार्थयामहे ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः

पल्लवपुरि - पालघट्ट
विजय माघ कृष्णपञ्चमी

इत्थं श्रीशिष्याः
पल्लवपुर - आदित्यपुर अग्रहार
निवासिनः [illegible] ॥

டான தருமங்களைப் புகட்டுவது எப்படி என்ற சிந்தை தீரும்படி வித்துவசிரேஷ்டர்களான தாங்கள் தருமநெறி காப்பதே தலைமையான கடமை என்று எண்ணி இடையில் வரும் இன்னல்களையும் கணிசியாது அளப்பரிய தன்னுபதேசங்களால் உலகைச் சீர்திருத்திக் கொண்டு இப்பொழுது இந்த தேசத்திற்கு விஜயம் செய்திருக்கிறீர்கள் என்பதொன்றே 'பகவான் தருமங்களைக் காப்பதில் ஊக்கமாக விருக்கிறான்' என்பதற்கு முக்கியமான சான்றாகும் என்று நாங்கள் கண்கூடாக அறிகிறோம். 'பலரில் ஒருவனே ஆன்மாவை காட்சியளவையால் காண்கிறான்' என்ற கருத்துள்ள மறைவாக்யமும் ஸ்ரீ அழகியசிங்கரைப்போன்றவர்களை அடைந்தே உயிர் வாழ்கிறது என்று நாங்கள் மிக மகிழ்கிறோம்.

கடைசியில் சிஷ்யர்களான எங்களுக்கு நன்மை பயக்கும் ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்ய மங்களவிக்ரஹம் நோயற்றிருக்குமாறு ஸ்ரீலக்ஷ்மீநாராயணனையும் ஸ்ரீகோபாலக்ருஷ்ணனையும் இடையின்றி ப்ரார்த்திக்கிறோம்.

எங்கும் நிலவுக அமைதி

இப்படிக்கு

பல்லபுரம் - பாலக்காடு
விஜயஸ்ரீ மாசிமீ க்ருஷ்ணபஞ்சமி

ஸ்ரீமதழகியசிங்கருக்கு விதேயர்களான
பல்லபுர - ஆதித்யபுரவாஸிகளான சிஷ்யர்கள்.

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

யுத்தம் ஹிம்ஸையேயாயினும்

'सुखदुःखे समे कृत्वा लाभालाभौ जयाजयौ ।
ततो युद्धाय युज्यस्व नैवं पापमवाप्स्यसि ॥'

என்று பகவான் உபதேசித்தபடி யோக முறையில் அதைச் செய்தால் குற்றமொன்றுமில்லையென்பதை நன்றாக அறிந்தவர்கள் இவர்கள். ஆகையால் ஆயுதமெடுத்து மனிதரைக் கொல்லும் மஹாபாபிகள் இந்தக் கோபாலர்கள் என்ற நிந்தையில் சிறிதும் மனங்கொள்ளாதவர்கள் என்பது மாத்திரமன்றி ஜ்யோதிஷ்டோமம், ராஜஸூயம், அஶ்வமேதம் முதலிய சிறந்த யஜ்ஞங்களை அநுஷ்டிப்பவர்களைப் போல் மஹாபுண்யாத்மாக்கள், உத்தம தார்மிகர்கள் என்ற எண்ணமே கொண்டவர்களாக இருந்தார்கள். அதனால் இவ்விஷயங்களையெல்லாம் குறிப்பிட்டுத் தமது வெகுமதியைக் காட்டி

'கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம்
பொற்கொடியே'

என்று சொல்லி அப் பெண்ணை யெழுப்பினார்கள். எழுந்திருக்கவில்லை. மறுபடியும் எழுப்பினார்கள். அப்போது அப்பெண் மெத்தையின் மேல் சாய்ந்திருக்கும் நிலையிலுள்ள அழகைக் குறிப்பிட்டார்கள். தரையில் ஊன்றிய கால்கள் முதல் மேல் இடுப்பு வரையிலுள்ள பாகத்தின் பின் பக்கத்தை இவர்கள் பார்க்கும்போது, படமெடுத்து புற்றின் மேலிருந்த பாம்புபோல் அது இருப்பது இவர்களுக்குப் புலப்பட்டது. இதையும் கன்னிப்பருவம் கழியாத இயற்கை அழகையும் கருதி

'புற்றர வல்குல் புனமயிலே போதராய்'

என்றார்கள். இப்படி இவர்கள் எழுப்பியதெல்லாம் வீணாயிற்று. அவள் விழிக்கவேயில்லை. முன்வீட்டுப்பெண்கள்விஷயத்தில் கையாண்ட முறையையே இங்கும் அநுஷ்டிப்பதென்று நிச்சயித்தார்கள். ஸஹஸ்ர நாமத்தில் சில நாமங்கள் இரண்டுதரம் படிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 'शुभाङ्गः' என்பதொன்று. 'திவ்ய திருமேனியையுடையவன்' என்பது அதன் பொருள். இந்தத் திருமேனி நீலமேகஶ்யாமளம் என்பது ப்ரஸித்தம். ஸஹஸ்ரநாம பாராயணம் பண்ணுவதற்குமுன் எம்பெருமானை த்யானிக்க வேண்டும். அதற்காக த்யான ஶ்லோகங்கள் எற்பட்டிருக்கின்றன. அவற்றில் 'मेघवर्णं शुभाङ्गम्' என்றும் 'मेघश्यामम्' என்றும் எம்பெருமானுடைய வர்ணநம் இருக்கின்றது. அதன்படி முகில்வண்ணனாகப் பகவானை த்யானம் செய்து அவனுடைய நாமங்களை கோபகன்யைகள் கீர்த்தனம் செய்தனர். அப்பொழுதும் அப்பெண் அசையாமல் அப்படியே தூங்கிக்கொண்டிருந்தாள். அதைக் கண்ட நாயகப்பெண் நடந்ததை எல்லாம் சொல்லி மறுபடியும் அவளை எழுப்பினாள். 'இவ்வூரிலுள்ள தோழிகள் எல்லோரும் உன் வீட்டுக்கு வந்து முற்றத்தில் நின்று நீலமேகஶ்யாமளனான எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடுகின்றார்கள். அப்படியிருந்தும் நீ சிறிதும் அசையக்கூட வில்லை. பேசுவது எங்கே? அடி செல்வம் நிறைந்த பெண்ணே, ஒருவரும் வீட்டிலிராத போது உங்கள் செல்வமாகிய பசுக்களைப் பராமரிக்க நீ தானாகவே விடியற்காலையில் எழுந்திருக்கவேண்டியது உன் கடமை. அதுதானில்லையென்றால் எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடி நாங்கள் எழுப்பும் போதும் எழுந்திருக்காமல் தூங்குகின்றாயே! இது எதற்காக? உனக்கு தூக்கமே புருஷார்த்தமா என்ன' என்று. உடனே அப்பெண் விழித்து நிமிர்ந்து திரும்பிப் பார்த்தாள். தோழிமாரெல்லோரும் வந்திருப்பதைக்கண்டு பரபரப்பாகவந்துகதவைத் திறந்து அநுதாபத்தோடு அவர்களுடன் கலந்து சென்றாள்.

12. கனைத்து

கோபச்சிறுமிகள் மறுபடியும் நின்றுஎழுப்ப விரும்பிய மற்றொரு பெண்ணின் வீடும் முன் எழுப்பிய பெண்ணின் வீடு போன்றதாகவே இருந்தது. வேலைக்காரி வந்து கதவைத்திறந்து அவ்வீட்டிற்கு எஜமானனாய் அவ்வீட்டுப்பெண்ணின் மூத்தஸஹோதரனான புருஷனும் மற்றவர்களும் யுத்தத்திற்காகவும் வேறு காரணத்தினாலும் வெளியே போயிருப்பதாகவும் அப்

பெண் ஒருத்தியே வீட்டிலிருப்பதாகவும் அறிவித்து அவர்களை உள்ளே போய்ப்பெண்ணை எழுப்பிஅழைத்துப்போகலாமென்று சொல்லி அவர்களை உள்ளே வரவிட்டாள். அவர்கள் உள்ளே வந்து கண்ட காட்சி முன் போலவே அவர்களுக்கு மிகுந்த வியப்பையும் களிப்பையும் தந்தது. பலபல எருமைக் கணங்களிருந்தன. ஒவ்வொரு எருமையும் உருவத்தில் மாத்திரமன்றி நிறத்திலும் யானையை ஒத்திருந்தது. எல்லாம் புதிதாக ப்ரஸவித்து இளங்கன்று உள்ளவை. கல்வி கற்று விவேகிகளாயிருப்பவர்களைக் காட்டிலும் பாமரர்களுக்குத் தன்னைச் சார்ந்த விஷயங்களில் பற்று அதிகம். பாமர மனிதரைக்காட்டிலும் ம்ருகங்களுக்குப் பற்று அதிகம். அவற்றுக்குள்ளும் பசுக்களைக் காட்டிலும் மிகவும் குறைந்த அறிவுள்ள எருமைகளுக்குத் தன் கன்றுகளிடத்தில் பாசம் அதிகம். ஆகவே அவைகள் கறக்கும் காலம் வந்த உடனே கன்றுகளை நினைத்துக் கனைக்கின்றன. 'ஐயோ பாவம். ஊட்டி வெகு நாழியாயிற்றே. உடனே வந்து பால் குடிக்கலாமே' என்று அவைகளிடத்தில் மிகுந்த இரக்கம் கொள்ளுகின்றன. உடனே கன்றுகள் வந்து ஊட்டுவதாகவே எண்ணி இடைவிடாது பாலைச் சுரந்து பொழிகின்றன. இடையர்களின் கைகளால் கறக்கப்பட்டு பாத்திரங்களில் போய்ச் சேரவேண்டிய பாலெல்லாம் முலையிலிருந்து தரையில் விழுகின்றது. அதனால் தரை எங்கும் நனைந்து சேராகின்றது, இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள் கோபகன்யைகள். இவ்வளவு ஸம்பத்தையுடைய புருஷன் எம்பெருமானுடைய கடாக்ஷத்திற்குப் பூர்ணபாத்ரமானவன் என்பதை எண்ணி அவனிடத்தில்விசேஷ ப்ரதிபத்தி செய்தனர். 'அவனூரில் இல்லையே. கறக்கும் காலம் கடந்து போகின்றதே. அதனால் பாலெல்லாம் கீழே போகின்றதே. இப்பெண் இன்னும் எழுந்திராமல் உறங்குகின்றாளே' என்ற எண்ணத்துடன் வீட்டுக்கட்டடத்தை அடைந்து வாசற்கதவைத்திறந்து பார்த்தனர். உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தபடியால் திறக்க முடியவில்லை. தாங்கள் அங்குக் கண்ட சிறப்பையெல்லாம் சொல்லி 'அவ்வித எருமைகளைப் படைத்த பெரும் சீமானுடைய தங்கையே, எழுந்திரு' என்று கூவி எழுப்பினார்கள். அப்பெண் எழவில்லை. 'அவளும் பெரும் தூக்கக்காரி. லகுவில் எழுந்திருக்கமாட்டாள்' என்பது புலனாயிற்று. இங்கும் முன்பு அநுஷ்டிக்கப்பட்ட உபாயத்தை அநுஷ்டிக்கவேண்டியதாயிற்று. ஆனால் பூர்ணமாக ஸஹஸ்ர நாம பாராயணம் செய்ய அவகாசமில்லை. நாழிகையாகிவிட்டது.

पार्वत्युवाच—

'केनोपायेन लघुना विष्णोर्नामसहस्रकम् ।
पठ्यते पण्डितैर्नित्यं श्रोतुमिच्छाम्यहं प्रभो ॥

ईश्वर उवाच—

श्रीराम राम रामेति रमे रामे मनोरमे ।
सहस्रनामतत्तुल्यं रामनाम वरानने ॥'

என்றது நினைவுக்கு வந்தது. உடனே நாயகப் பெண் ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தனம் செய்யும்படி ஸகிகளை வேண்டினாள். ஒரு தடவை 'ஸ்ரீராம' என்றால் அதற்கு ஸஹஸ்ரநாம பாராயணம் பூர்த்தியாக செய்யப்பட்டால் என்ன பலனோ அந்தப் பலனுண்டு என்பது இந்தப் பார்வதி ஈஸ்வரர்களுடைய ஸம்வாதத்தினால் ஏற்படுகின்றது. ஆகவே எத்தனை தடவை ராமநாம ஸங்கீர்த்தனம் நடைபெறுகின்றதோ அத்தனை விசேஷமுண்டென்று தெரிகின்றமையால் **'हरे राम हरे राम राम राम हरे हरे'** என்று எல்லோரும் உரக்கக் கோஷித்தார்கள். வாசற்படிக்கு வெளியில் மேல் கூரை ஒன்றுமில்லாமல் திறந்த வெளியாகவே யிருந்தது. அங்கு நின்று பாடுகின்ற இப்பெண்கள் மீது பனி பெய்து கொண்டிருந்தது. குளிர்ந்தது. சில பெண்கள் குளிரையும், வீட்டுக்கு வீடு காத்துக் கொண்டிருப்பதையும் பொறுக்கமாட்டாமல் மற்றவர்கள் வராவிட்டாலும் தாம் அந்த க்ஷணமே புறப்பட்டு நேராக நோன்பு ஆரம்பிக்கவேண்டிய இடத்திற்குப் போய்விடவேண்டுமென்று பதைத்தார்கள். ஆயினும் ப்ரதான கோபகுமாரியினிடத்திலுள்ள தாக்ஷிண்யத்தினால் வெளியில் ஸ்பஷ்டமாகச் சொல்லாமல் தவித்தார்கள். இதையறிந்த அவள் உச்சஸ்வரத்தில் 'அம்மா, எங்கள் தலை யெல்லாம் பனியால் நனைந்து விட்டதே. குளிர்கின்றதே. உன் வீட்டு வாசற்படி மாத்தைப்பற்றிக் கொண்டு வெகு நாழியாக ஸ்ரீ ராமநாம ஸங்கீர்த்தனம் செய்கின்றோமே. மாறாத தன் தயா ஸ்வபாவத்தையும் மாற்றிக் கோபங்கொண்டு, ஸீதாபஹாரம் செய்த ராவணனை ஸம்ஹரித்த அந்த ரகுவீரன் உன் ப்ரஜ்ஞையை அபஹரித்த இக்கொடிய தூக்கத்தைத் தொலைக்கச் சக்தியற்றவனா? நம்மிடத்தில் தயையில்லாதவனா? அருளவேண்டுமென்று ப்ரார்த்தித்துத்தானே பாடுகின்றோம். அப்படியும் நீ வாய் திறந்து பேசாமல் படுத்திருக்கின்றாயே. இனியாவது எழுந்திரு. விழித்துக் கொண்டே படுத்துப்

பேசாமலிருக்கின்றாயா? ராமனாயிற்றே அவன். நமது பாஷையில் 'மனத்துக்கினியான்' என்கின்றோம். அவனைப் பாடும்போது பரவசமாக உன் வாயிலிருந்து 'ராம ராம' என்ற திருநாமம் வெளிவர வேண்டுமே. ஆனால் வரவில்லையே. வாய்திறக்கக் கூடாது என்று ஸங்கல்பித்து வேணுமென்றே மௌனமாக இருக்கின்றாயா? அது உசிதமில்லை. நாழியாகி விட்டது. எழுந்திரு' என்றாள். இப்படி அவள் கூப்பிட்டதெல்லாம் வீணாயிற்று. உள்ளே படுத்திருந்த பெண் எழுந்ததாகவோ விழித்ததாகவோ தோன்றவில்லை. அதற்கான ஒரு அறிகுறியும் காணவில்லை. என்ன செய்வதென்று தோன்றாமல் 'இதென்ன பெருந் தூக்கம்' என்றாள். பிறகு 'தடதட' வென்று ஒரு நிமிஷம் இடைவிடாமல் கதவைத் தட்டினாள். மற்றவர்களும் இப்படி ஓங்கி ஓங்கித் தட்டினார்கள். இந்தப் பெரும் ஓசை கேட்டு 'என்ன விசேஷமோ' என்று அறிய விரும்பிய அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் பலர் ஓடிவந்து அங்குக் கூடினர். அப்போது மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தாள் அவ்வீட்டுப்பெண். அவள் வெகு கம்பீரமாகவும் சாந்தமாகவும் வந்ததிலிருந்து வெளியேயிருந்த பெண்கள் அவளை யெழுப்புவதற்காக இவ்வளவு காலம் பட்ட ஸ்ரமத்தைக் கொஞ்சமும் அவள் உணரவில்லை யென்பது வெளியாயிற்று. அதை யறிந்த இப்பெண்கள் அவளைப் பார்த்தவுடன் என்ன சொல்வது என்பது தோன்றாமல் க்ஷணகாலம் மௌனமாக விருந்தனர். அப்பெண் 'ஏன் இங்கு வந்துவெறுமனே நின்றுகொண்டிருக்கிறீர்கள்? என்னை எழுப்பக் கூடாதோ? ஒரு குரல் கூப்பிடக் கூடாதோ?' என்றாள். மற்றப் பெண்கள் எல்லோரும் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகை செய்தனர்.

அப்பெண்—என்னடி சிரிக்கின்றீர்கள்? நீங்கள் எழுப்பி நான் எழுந்திருக்கவில்லையா?

மற்றவர்களுக்குள் ஒருத்தி—போதும் போதும் அம்மா. வயை மூடிக்கொண்டு பேசாமல் இரு. உன்னைத்தூக்கத்திலிருந்து எழுப்ப ஸர்வேஸ்வரன்தான நேரில் வரவேண்டும். அவனாலும் முடியுமோ முடியாதோ.

அப்பெண்-ஐயோபாவம். எனக்காக ரொம்ப ஸ்ரமப்பட்டிருக்கின்றீர்கள்போலும். கூப்பிட்டு எழுந்திருக்காமல் போனால் கதவை 'தட தட' என்று ஓங்கி அடிக்கிறது தானே. உடனே எழுந்துவிடுகிறேன்.

நாயகப்பெண்—அதுவும் வேண்டிய வரையில் ஆயிற்று அம்மா. நாங்கள் கதவை இடித்த ஓசை ஊரில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோர் காதிலும் விழுந்தது. ஸாக்ஷி வேண்டுமானால் இதோ இவர்களைப் பார். என்ன விசேஷமென்று கேட்டுக்கொண்டு வந்தவர்கள் இவர்கள்.

இதைக் கேட்ட அப்பெண் மிக வருந்தி 'உங்களுக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்த என்னை க்ஷமியுங்கள்' என்று ப்ரார்த்தித்துவிட்டு அவர்களுடன் சேர்ந்து அங்கிருந்து புறப்பட்டாள்.

13. புள்ளின் வாய்

பெண்கள் பகவந்நாமங்களைப் பாடிக்கொண்டே நடந்தார்கள். தூங்கும் தோழிகளை எழுப்புவதற்கு உபாயமாகப் பாடினவர்கள் அதிலுள்ள ருசியினாலே பிறகு மௌனமாக இருக்கமாட்டாமல் ஸ்வயம் ப்ரயோஜநமாகவே பாட ஆரம்பித்து விட்டார்கள். இப்படி அவர்கள் வெகு அழகாகப் பாடிக்கொண்டு கொஞ்ச தூரம் சென்ற பிறகு இன்னும் கோஷ்டிக்கு வந்து சேராமல் வீட்டிலேயே படுத்திருக்கின்ற ஒரு பெண்ணின் வீடு எதிரில் தோன்றிற்று. 'அதன் அருகே சென்றவுடன் நாயகப்பெண் அங்கு போய் எவ்வளவுக்லேசமிருந்தாலும் எவ்வளவு நேரமானாலும் அவ்வீட்டுப் பெண்ணை எழுப்பி அழைத்து வந்தே தீருவாள், அவள் வராமல் கோஷ்டியை மேலே செல்ல விடமாட்டாள்' என்பதை நிச்சயமாக எல்லாப் பெண்களுமே அறிவார்கள். ஆகையால் முன்பே பல வீடுகளுக்குப்போய்ப் பல பெண்களை எழுப்பும் போது அதிருப்தியையும் அஸ்ரத்தையையும் காட்டிய பல பெண்கள் இப்போது அறவே பொறுமையை இழந்தார்கள். நாயகப் பெண்ணைக் கூப்பிட்டு 'உன் தாக்ஷிண்யத்திற்கு இது வரையில் நாங்கள் கட்டுப்பட்டிருந்தோம். இனி அதுமுடியாது. இனி நாங்கள் ஒரு வீட்டிற்கும் வரமாட்டோம். வீடுவீடாய்ப் போவதும் காத்துக்கொண்டு நிற்பதும் ஸமாணமில்லாமல் முரட்டுத் தூக்கம் தூங்குகின்றவர்களை எழுப்பி எழுப்பிக் கஷ்டப்படுவதும் இது தானா நமக்கு வேலை? நம்மைப் போல் அவர்கள். அவர்களைப் போல் நாம். அவர்களென்ன நிச்சிந்தையாய் வீட்டில் படுத்துறங்குவது, நாமென்ன அவர்கள் வீட்டுக்கு வந்து எழுப்புவது? எங்களுக்குச்

சிறிதும் இது பிடிக்கவில்லை. இனி நாம் ஒருவர் வீட்டுக்கும் போகக் கூடாது. நாழியும் ரொம்ப ஆகிவிட்டது, நேராகவே போவோம்' என்றிப்படிப் பட பட வென்று சொன்னார்கள். இவர்களுடைய மனோ நிலையை உள்ளபடி அறிந்த நாயகப் பெண் இனி என்ன சொன்னாலும் இவர்கள் நிற்கமாட்டார்கள் என்பதை உணர்ந்து, ஆகிலும்

> 'धर्मज्ञश्च कृतज्ञश्च सत्यवाक्यो दृढव्रतः ।
> चारित्रेण च को युक्तः सर्वभूतेषु को हितः'

என்றிப்படி ஸ்ரீராகவனைப்பற்றிவிசேஷித்துக் கூறப்பட்ட உத்தமகுணங்கள் நிறையப்பெற்றவளாகையால் ஶாந்தமாகவே 'பிறருக்காகக் காத்துக் கொண்டிருப்பதும் துன்பப் படுவதும் ஶ்ரமம்தான். ஆனால் தோழிகளின் விஷயத்தில் நாம் எதையும் ஸஹிக்க வேண்டும். அவர்களை விட்டு விட்டுப்போனால் பிறகு அதையே நினைத்து நினைத்து வருந்த வேண்டியிருக்கும். உத்ஸாஹமாகவும் ஸந்தோஷமாகவும் வ்ரதத்தை அநுஷ்டிக்க முடியாது. ஆகையால் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இனி இரண்டு மூன்று பேர்களைத் தான் எழுப்ப வேண்டியிருக்கும். இவ்வித ஸந்தர்ப்பங்களில் தவிர நமது தோழமையைக் காட்ட வேறு அவகாசம் ஏது? அவர்கள் தூங்கிக்கொண்டிருக்க நாம் மட்டும் நீராடி நோன்பு நோற்பது பெரும் த்ரோகமன்றோ? உங்களுக்கெல்லாம் தெரியாத விஷயமா நான் சொல்லப் போகிறேன்? கொஞ்சம் பொறுங்கள்' என்று கெஞ்சும் பாவனையில் கூறினாள். இதை அவர்கள் லக்ஷ்யம் செய்யவே யில்லை. 'ஸரி, நீ உன்னிஷ்டப்படி எல்லோரையும் எழுப்பி அழைத்துக்கொண்டு மெதுவாக வா. நாங்கள் நேராகப் பாவைக் களத்திற்கு அதாவது நதிக்கரையில் வ்ரதத்தை ஆரம்பிப்பதற்காக ஏற்பட்ட இடத்திற்குப் போகின்றோம்' என்று சொல்லிவிட்டு இனிமையாக எம்பெருமானுடைய நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு பிரிந்து தனி கோஷ்டியாகப்போய்விட்டார்கள்.

மேல் என்ன நடக்கும் என்பதை நன்றாக அறிந்த நாயகப் பெண் அவர்கள் அவ்வளவு மிடுக்காகப் போனதைப் பற்றி அதிக வருத்தம் கொள்ளாமல் எந்த நிலையிலும் தன்னையே அநுஸரிக்கும் ஸ்வபாவமுள்ளவர்களாகையால் போனவர்களைப் பின் பற்றிப் போகாமல் தன்னுடனேயே யிருந்த மற்றத் தோழிகளுடன் சென்று இன்னும் எழுந்துவராத பெண்ணின் வீடு வந்ததும் நின்று அவளை எழுப்பப் போனாள். வீடு திறந்திருந்தது. அதில் வஸிக்கும் பெரியோர்கள் எழுந்து தமது வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். பெண்ணை எழுப்பி அழைத்துப் போக வந்திருக்கின்றோமென்று நாயகப்பெண் சொன்னதைக் கேட்ட அப் பெரியோர்கள் 'அதோ அந்த அறையில் படுத்திருக்கின்றாள். போய் எழுப்பி அழைத்துப் போங்கள்' என்றார்கள். அதைக் கேட்ட நாயகப் பெண் அவ்வறை வாசற்படியின் அருகே சென்று 'பெண்ணே, எழுந்து வா சீக்கிரம். நமது ஸகிகள் எல்லோரும் நோன்பு ஆரம்பிக்கவேண்டிய இடத்திற்குப் போய் விட்டார்கள். அவ்வளவு போது ஆகிவிட்டது. இனியும் படுத்திருப்பது தகாது. விழித்துக் கொள். எழுந்திரு. கதவைத் திற. வா வெளியில் சீக்கிரம்' என்றாள். கதவும் திறக்கவில்லை. பதிலும் ஒன்று மில்லை. மறுபடியும் 'எழுந்திருக்க இன்னும் காலம் வரவில்லை என்று எண்ணிக்கொண்டிருக்கிறாயா? விடியற்காலம் ஶுக்ரோதயமும் ப்ரஹஸ்பதி அஸ்தமயமும் உள்ள நாள்களன்றோ இவை. வெளியில் வந்து பார். ஶுக்ரன் உதித்து வெகு தூரம் வந்தாயிற்று. ப்ருஹஸ்பதியும் அஸ்தமித்தாயிற்று. ஆகையால் இதுவிடியற்காலம். எழுந்திருக்கும் நாழிகையாகிவிட்டது. எழுந்திரு' என்றாள். இதற்கும் பதில் ஒன்றுமில்லை. பிறகு 'வெளியில் வந்து ஆகாசத்தைப் பார்த்துத்தான்காலத்தைத்தெரிந்து கொள்ள வேணுமோ? விடியும் ஸமயமானால் இருந்த இடத்திலேயே பக்ஷிகளின் ஶப்தம் காதில் வந்து விழாதோ என்று எண்ணி ஒருகால் எழாமலிருக்கின்றாயோ' என்று ஸந்தேஹித்து 'அம்மா' பக்ஷிகள் ஶப்தித்து வெகு நேரமாகிவிட்டதே. தூக்கத்தில் நீ அதைக் கேட்கவில்லை. இனி நாளை ராத்திரி முடிவில் தான் பக்ஷிகளின் ஶப்தத்தைக் கேட்க முடியும். ஒரு ஸந்தேஹமும் படாமல் சீக்கிரம் எழுந்து வா' என்றாள். பதிலில்லை. இனி வாயால் எழுப்பி ப்ரயோஜநமில்லை. கதவை இடித்துத் தான் எழுப்பவேண்டுமென்று தோன்றிற்று. ஊரத்துத் தட்டுவதற்காகக் கொஞ்சம் வேகமாகவே கையைக் கதவின் மேல் கொண்டு வைத்தாள். தாளிடப்படாமலே இருந்தமையால் கதவு உடனே திறந்து கொண்டது. நாயகப் பெண் உள்ளே சென்று பார்த்தாள்.

(தொடரும்)

வணங்குகிறானோ, ஸ்மரதி–த்யானம் செய்கிறானோ, வக்தி–கீர்த்தனம் செய்கிறானோ, பர்யேதிவா–ப்ரதக்ஷிணம் செய்கிறானோ, ஹே குணேச–கல்யாண குணங்களுக்கு ஆச்ரயபூதனே, கோபாயிது:–ஸர்வ ரக்ஷகனான, தவ–உம்முடைய, கமபி–ஏதாவதொரு, குணம்–குணத்தை, வேத்திவா–அறிகிறானோ, தஸ்ய–அந்த புருஷனுக்கு, கதாசந–ஒருகாலத்திலும், குதச்சந–யாரிடமிருந்தும், க்வசந–எந்த இடத்திலும், பயம்–பீதி, நஸ்யாத்–உண்டாகாது.

(கரு) பத்தன், முக்தன், நித்யன் என்று மூன்றுவிதமான ஜீவராசிகளுக்கும், ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம் என்று மூன்றுவிதமான அசேதநங்களுக்கும் ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திகள் எவருடைய ஸங்கல்பாதீனமாயிருக்கின்றனவோ, அப்படிப்பட்ட ஸர்வேச்வரனான உம்மை எவனொருவன், தன் வாக்கினால் ஸ்தோத்திரம் செய்கிறானோ, சிரஸ்ஸினால் வணங்குகிறானோ, மனத்தால் த்யானிக்கிறானோ, அல்லது, உம்முடைய நாமஸங்கீர்த்தனங்களைச் செய்கிறானோ, ப்ரதக்ஷிணம் செய்கிறானோ, அல்லது, ஸமஸ்த கல்யாணகுணங்களுக்குமிருப்பிடமான உம்முடைய திவ்யாத்ம ஸ்வரூபகுணங்களிலோ, திவ்யமங்கள விக்ரஹங்களிலோ, ஏதாவதொரு குணத்தை அறிகிறானோ, அவனுக்கு எக்காலத்திலும், எவ்விடத்திலும், யாரிடமிருந்தும் கொஞ்சம்கூட பயம் உண்டாவதில்லை.

மேல் ச்லோகத்தில் பகவத்ப்ரபத்தியின் பெருமையை வெளியிடுகிறார்.

स्थिते मनसि विग्रहे गुणिनि धातुसाम्येसति स्मरेदखिलदेहिनं य इह जातुचित् त्वामजम् ।
तयैव खलु सन्धया तमथ दीर्घनिद्रावशं स्वयं विहितसंस्मृतिर्नयसि धाम नैश्रेयसम् ॥

ஸ்திதே மநஸி விக்ரஹே குணிநி தாதுஸாம்யே ஸதி
ஸ்மரேதகில தேஹிநம் ய இஹ ஜாது சித் த்வாமஜம்
தயைவ கலு ஸந்தயா தமத தீர்க்கநித்ராவசம்
ஸ்வயம் விஹித ஸம்ஸ்ம்ருதிர் நயஸி தாம நைச்ரேயஸம் ॥

19954

(ப–ரை) இஹ–இவ்வுலகில், ய:–எவன், மநஸி–மநஸ்ஸு, ஸ்திதேஸதி–நிச்சலமாயிருக்கும்போதும், விக்ரஹே–சரீரம், குணிநி–ரோகமில்லாமல் ஸ்வஸ்தமாயிருக்கும் போதும், தாதுஸாம்யேஸதி–வாத பித்தாதி தாதுக்கள் எல்லாம் ஸமமானநிலையிலிருக்கும் போதும், அகிலதேஹிநம்–ஸர்வசரீரியாயும், அஜம்–உத்பத்தியில்லாதவருமான, த்வாம்–உம்மை, ஜாதுசித்–ஒரு ஸமயத்தில், ஸ்மரேத்–(உபாயனையும், ப்ராப்யனையும்) அத்யவஸாநம் செய்வானோ. (ப்ரபத்தியைச்செய்வானோ என்றபடி) அத–பிறகு, (வேறொருஸமயத்தில்,) தீர்க்கநித்ராவசம்–மரணவஸ்தையின் அதீனனான, தம்–அவனை, தயாஸந்தயைவ–அந்தப்ரபத்திரூபஸ்மரணத்தினாலேயே, ஸ்வயம்–தானே, விஹித–செய்யப்பட்ட, ஸம்ஸ்ம்ருதி:–அந்திமஸ்ம்ருதியையுடையவனாய்க் கொண்டு, நைச்ரேயஸம்தாம–மோக்ஷஸ்தானமான வைகுண்டத்தை, நயஸி–அடைவிப்பிக்கிறீர்.

(கரு) எல்லாப்பொருளுக்கும் அந்தராத்மாவாய் நித்யனான உம்மை, எந்த புருஷன் ஸதா சஞ்சலமான மனஸ்ஸு உம்முடைய க்ருபாவிசேஷத்தினால் நிச்சலமாயிருந்து, வாத பித்தாதி தாதுக்களும் விஷமாவஸ்தையை (ஒன்று அதிகமாயும் மற்றொன்று குறைவாகவும் இருக்கும் நிலையை) அடையாமல் ஸமமாக இருக்கும் நிலையையடைந்து சரீரம் வ்யாதி முதலிய உபத்திரவமில்லாமலிருக்கும்போது ஏதாவதொரு ஸமயத்தில் ஸர்வாந்தர்யாமியாய்

நித்யனுன உம்மிடம் ப்ரபத்தி செய்கிறுனே அதைப்ரபத்திரூபமான ஸ்மரணத்தையே ப்ரதானமாகக்கொண்டு கடைசியில் (அவன்) மரணமடையும்போது அவனுக்கும் அந்திம ஸ்ம்ருதியை யுண்டுபண்ணி மோக்ஷஸ்தானமான ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறீர்.

மேல் ச்லோகத்தில் பகவந்நாம ஸங்கீர்த்தனத்தின் பலனை ஸாதிக்கிறுர்.

रमादयित रङ्गभूरमण कृष्ण विष्णो हरे त्रिविक्रम जनार्दन त्रियुग नाथ नारायण ।
इतीव शुभदानि यः पठति नामधेयानि ते न तस्य यमवश्यता नरकपातभीतिः कुतः ७

ரமாதயித ரங்கபூரமண க்ருஷ்ண விஷ்ணே ஹரே
த்ரிவிக்ரம ஜநார்த்தந த்ரியுகநாத நாராயண ।
இதீவ சுபதாநி ய: படதி நாமதேயாநி தே
ந தஸ்ய யமவச்யதா நரகபாதபீதி: குத: ॥

(ப-ரை) ரமாதயித-லக்ஷ்மீகாந்தனே, ரங்கபூரமண-ஸ்ரீரங்கத்தில் ஆசையுள்ளவனே, க்ருஷ்ண-(தன் அழகால்)உலகத்தை ஆகர்ஷிப்பவனே, விஷ்ணோ-ஜகத்தை வ்யாபித்திருப்பவனே, ஹரே-ஆச்ரிதர்களுடைய பாபத்தை போக்கடிப்பவனே, த்ரிவிக்ரம-(உலகை அளக்கும்) மூன்று அடிகளையுடையவனே, ஜநார்த்தன-ஆச்ரிதவிரோதி ஜனங்களை நாசம் செய்பவனே, த்ரியுக-ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ், என்கிற மூன்று இரட்டை குணங்களையுடையவனே, நாத-ஸர்வஜகத்துக்கும் நாதனே, நாராயண-எல்லா தத்வங்களுக்தும் இருப்பிடமானவனே, இதீவ-என்பவைபோன்ற, சுபதாநி-மங்களத்தைக் கொடுக்கக்கூடிய, தே-உம்முடைய, நாமதேயாநி-திவ்யநாமங்களை, ய:-எவன், படதி-கீர்த்தனம் செய்கிறுனே, தஸ்ய-அவனுக்கு, யமவச்யதா-யமனுடைய வசத்தை அடைவது, ந-இல்லை. நரகபாத-நரகத்தில் விழுவோமென்கிற, பீதி:-பயம், குத:-எங்கிருந்து உண்டாகும்.

(கரு) ரமாதயித, ரங்கபூரமண, க்ருஷ்ண, விஷ்ணோ, ஹரே, த்ரிவிக்ரம, ஜநார்த்தன, த்ரியுக, நாத, நாராயண என்பவைபோன்ற உலகிற்கு மங்களகரமான உம்முடைய திவ்ய நாமங்களை எவன் ஸங்கீர்த்தனம் செய்கிறுனே அவன் யமனுக்கு அதீனனுக ஆகிறதில்லை. அப்படியிருக்கும் போது நரகத்தில் விழுவோமோ என்கிற பயம் எங்கிருந்து உண்டாகும். "न खलु भागवता यमविषयं गच्छन्ति" (பகவத்பக்தர்கள் யமலோகத்தை அடைவதில்லை.) कमलनयन वासुदेव विष्णो.........भव शरणमितीरयन्ति ये वै त्यज भट दूरतरेण तानपापान्"(யமன் தன் படனைப் பார்த்து, பகவந்நாமங்களை உச்சரிப்பவர்களை நீ அழைத்துக்கொண்டு வர வேண்டாம். அவர்கள் பாபிகளல்ல என்று சொல்லுகிறுன்.) இது முதலிய ப்ரமாணங்களைத் திருவுள்ளத்தில் கொண்டு இப்படி ஸாதிக்கிறுர்.

மேல் ச்லோகத்தில் பாகவதனின் பெருமையை அருளிச்செய்கிறுர்.

कदाचिदपि रङ्गभूरसिक यत्र देशे वशी त्वदेकनियताशयस्त्रिदशवन्दितो वर्तते ।
तदक्षततपोवनं तव च राजधानी स्थिरा सुखस्य सुखमास्पदं सुचरितस्य दुर्गं महत् ॥ ८

கதாசிதபி ரங்கபூரஸிக யத்ர தேசே வசீ
த்வதேக நியதாசயஸ்த்ரிதசவந்திதோ வர்த்ததே ।
ததக்ஷததபோவநம் தவ ச ராஜதாநீ ஸ்திரா
ஸுகஸ்ய ஸுகமாஸ்பதம் ஸுசரிதஸ்ய துர்க்கம் மஹத் ॥

(ப-ரை) ரங்கபூரஸிக-ஸ்ரீரங்கத்தில் ப்ரீதியுள்ள ஸ்ரீரங்கநாதனே! வசீ-ஜிதேந்திரியனும், த்வதேக-உம் ஒருவரிடமே, நியத-நிச்சலமான, ஆசய:-மனத்தை உடையவராயும், த்ரிதசவந்தித:-தேவர்களாலும் பூஜிக்கப்பட்டவனுயுமிருக்கிற மஹாபுருஷன், யத்ரதேசே-எந்தப்ரதேசத்தில், கதாசிதபி-எதாவதொரு ஸமயத்தில், வர்த்ததே-இருக்கிறனே, தத்-அந்த தேசம், அக்ஷத-விக்நமில்லாத, தபோவநம்-தபோவநமாயும், ஸ்திரா-ஸ்திரமான, தவ-உம்முடைய, ராஜதாநீ-ப்ரதான நகராயும், ஸுகஸ்ய-ப்ரஹ்மாநந்த ஸுகத்திற்கு, ஸுகமாஸ்பதம்-துக்கம் கலவாதஸ்தானமாயும், ஸுசரிதஸ்ய-நல்லநடத்தைக்கு, மஹத்-பெரிய, துர்க்கம்-கோட்டையாயுமிருக்கிறது.

(கரு) ஓ ரங்கநாதா! இந்திரியங்களை வசப்படுத்தி, மனத்தை உம் ஒருவரிடமே நிச்சலமாய் வைத்து த்யாநம் செய்து அதின் பலனுய், 'प्रणमन्ति देवताः'' என்கிறபடி தேவதைகளாலும் கொண்டாடப்பட்ட மஹாபாகவதர் எவ்விடத்தில் ஒரு ஸமயம் வாஸம் செய்கிறரோ அந்தஸ்தலம் விக்நமில்லாத தபோவநமாயும், (ராகாதி தோஷங்களில்லாத பதரிகாச்ரமாதி துல்யமாயும்,) உம்முடைய ஸ்திரமான பரமபதத்திற்கு துல்யமான ப்ரதான நகரமாயும், ஸம்ஸாரதுக்கம் கலவாதபகவதநுபவஸுகத்திற்கு ஸ்தாநமாயும், பாகவத தர்மத்திற்கு பெரிய கோட்டையாயுமிருக்கிறது.

(இனி மேல் ச்லோகத்தில் பகவத்குண வைபவத்தை அருளிச்செய்கிறர்.)

त्रिवर्गपथवर्तिनां त्रिगुणलङ्घनोद्योगिनां द्विषत्प्रमथनार्थिनामपि च रङ्गदृश्योदयाः ।
स्खलत्समयकातरीहरणजागरूकाः प्रभो करग्रहणदीक्षिताः क इह ते न दिव्या गुणाः ९

த்ரிவர்கபதவர்த்திநாம் த்ரிகுணலங்கநோத்யோகிநாம்
த்விஷத் ப்ரமதநார்த்திநாமபி ச ரங்கத்ருச்யோதயா: ।
ஸ்கலத்ஸமயகாதரீஹரணஜாகரூகா: ப்ரபோ
கரக்ரஹணதீக்ஷிதா: க இஹ தே ந திவ்யாகுணா: ॥

(ப-ரை) ஹே ப்ரபோ!-ஓ ப்ரபுவே, த்ரிவர்கபதவர்த்திநாம்- தர்ம, அர்த்த, காம மார்க்கங்களிலிருப்பவர்களுக்கும், த்ரிகுணலங்கந-ஸத்வரஜஸ்தமோகுணங்களை தாண்டுவதில் (ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத கைவல்ய ஸுகத்தில்) உத்யோகிநாம்-முயற்சியுள்ளவர்களுக்கும், த்விஷத்ப்ரமதன-சத்ரு நாசகனுன பகவானை, அர்த்திநாமபி-ப்ரார்த்திக்கிறவர்களுக்கும், (பகவதநுபவம் ஒன்றையே விரும்புகிற முமுக்ஷுக்களுக்கும்) ரங்க-ஸ்ரீரங்கத்தில், த்ருச்ய-காணப்படுகிற, உதயா:-ஆவிர்ப்பாவத்தை உடையவைகளாயும், ஸ்கலத்ஸமய-ஆபத்காலத்தில், காதரீ-பயத்தின், ஹரண-போக்கடிப்பதில், ஜாகரூகா:-மிகவும் ஜாக்ர

தையையுடையவைகளாயுமிருக்கிற, தே-உம்முடைய, திவ்யா:-கல்யாணபூதங்களான, கே குணா:-எந்த குணங்கள்தான், கரக்ரஹண-கைகொடுப்பதில், தீக்ஷிதா:-தீக்ஷை (வ்ரதம்) உள்ளவைகளாக ந பவந்தி-இல்லை.

(கரு) ப்ரபோ! 'त्वद्ज्ञानशक्तिकरुणासु सतीषु नैव पापं पराक्रमितुमर्हति मामकीनम्' (உம்முடைய ஜ்ஞாநம், ஸர்வசக்தி, கருணை இவைகளிருக்கும்போது என்னுடைய பாபத்திற்கு அவைகளின் முன் எதிர்த்து நிற்க சக்தி கிடையாது) என்கிறபடி, துராசாரமுள்ளவர்களுக்கும் ஒரு தரம் ஸ்மரணமாத்திரத்தினுல் பாபங்களைப் போக்கி பயத்தை நீக்குவதில் மிகத் திறமையுள்ளவைகளாயும், ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ப்ரத்யக்ஷங்களாயுமிருக்கிற உம்முடைய திவ்யகுணங்களுள் எந்த குணங்கள்தான் தர்மார்த்த காமரூபமான மூன்று புருஷார்த்தங்களை அபேக்ஷிக்கிற ஐச்வர்யார்த்திகளுக்கும், அதற்கு மேற்பட்ட கேவலாத்மாநுபவ ஸுகத்தை அபேக்ஷிப்பவர்களுக்கும், நச்வரமான இவைகளைக் காட்டிலும் உயர்ந்ததாயும், நித்யமாயும், எல்லையில்லாததுமான உம்முடைய அநுபவ ஸுகத்தை விரும்புகிற மோக்ஷார்த்திகளுக்கும், கைகொடுத்துக் காப்பாற்றுவதில் ஆதரமில்லாதவைகளாக இருக்கின்றன. (எல்லாகுணங்களும் தர்மார்த்த காம மோக்ஷார்த்திகளைக் காப்பதில் த்வரை உள்ளவைகளாகவே இருக்கின்றன வென்று தாத்பர்யம்.)

அடுத்த ச்லோகத்தில் பகவத்திவ்ய குணங்களுக்குள் தயாகுணத்தின் ப்ரபாவத்தை விசேஷித்து அநுஸந்திக்கிறுர்.

बिभेति भवभृत्प्रभो त्वदुपदेशतीव्रौषधात् कदध्वरसदुर्विषे बडिशभक्ष्वत्प्रीयते ।
अपथ्य परिहारधी विमुखमित्थमाकस्मिकी तमप्यवसरे क्रमादवति वत्सला त्वद्दया ॥ १०

பிபேதி பவப்ருத்ப்ரபோ த்வதுபதேச தீவ்ரௌஷதாத்
கதத்வரஸதுர்விஷே படிசபக்ஷவத் ப்ரீயதே ।
அபத்யபரிஹாரதி விமுகமித்தமாகஸ்மிகி
தமப்யவஸரேக்ரமாதவதி வத்ஸலா த்வத்தயா ॥

(ப-ரை) ஹே ப்ரபோ! பவப்ருத்-ஸம்ஸாரியான புருஷன், த்வதுபதேச-உம்விஷயமான வேதாந்த, இதிஹாஸங்களில் உள்ள உபதேசமாகிற (அல்லது, த்வதுபதேச-உம்மால் செய்யப்பட்ட உபதேசரூப பாஞ்சராத்ர பகவத்கீதாதிகளாகிற) தீவ்ரௌஷதாத்-கடுமையான மருந்தினிடமிருந்து, பிபேதி-பயப்படுகிறுன். கதத்வ—கெட்ட மார்கங்களாகிற, மற்ற சாஸ்திரங்களின், ரஸ—ஸ்திரமான அர்த்தமாகிற, துர்விஷே—கொடிய விஷத்தில், படிசபக்ஷவத்—தூண்டியிலிருக்கும் பக்ஷண வஸ்துவினிடம் போல், ப்ரீயதே—ப்ரீதியை வைக்கிறுன். இத்தம்—இப்படி, அபத்ய—அநுகூலமில்லாதவைகளின், பரிஹாரதீ—பரிஹரிக்கும் யோசனையில், விமுகம்-நோக்கில்லாத, தமபி—அவனையும், வத்ஸலா—தோஷத்தைக் கணிசிக்காத, த்வத்தயா—உம்முடைய தயை, அவஸரே—தகுந்த ஸமயத்தில், க்ரமாத்-கிரமமாக, அவதி-ரக்ஷிக்கிறது.

ஸ்ரீ:

பத்ரிகைத் தொண்டு

அடியேனுடைய நண்பர்கள் இருவர் கீழ்க்கண்டவாறு பேசிக்கொண்டதை ஒரு ஸமயம் அடியேன் கற்பனைக் காதுகளால் கேழ்க்க நேர்ந்தது. அதன் ஸாராம்சம் வாசகர்களுக்குப் பயன்படும் என்று கருதி இங்கு அதை சுருங்க ப்ரஸ்தாவிக்கிறேன்.

ஒருவர்— (எதிலும் பழமை விரும்பி) மற்றொருவரைப் பார்த்து) பத்ரிகைகளைப் பற்றி தேவர் பேசநேர்ந்ததையடுத்து அவைவிஷயத்தில் பொதுவான என் அபிப்ராயத்தையும் சொல்லிவிடுகிறேன். இக்காலத்திய பத்ரிகை போன்ற தொன்றை முன் காலத்தில் நமது முன்னோர்கள் அறிந்திருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். அரசியலென்பது சில ஸ்வஜந ஸார்வபௌமர்களின் ஏகபோக உரிமையாக இருந்த நிலைமாறி, பொதுஜநங்களின் வாக்குப்படி நடப்பதென்று தீர்ந்தபிறகு, வெறும் அரசியல்கட்சிப்ப்ரசாரத்திற்காகவென்றே ஏற்படுத்தப்பட்ட ஒருபுதிய சரக்குதான் பத்ரிகை ஆகும். காலப்போக்கில் வேறு பலவித உலகநடப்புக்களும், செய்திக் குறிப்புக்களும், இப்பொழுது அதில் இடம்பெற ஆரம்பித்துள்ளன.

மற்றொருவர்—(காலத்தின் சூழ்நிலைக்கேற்ப ந்யாயமான மாறுதல்களை விரும்புவர்) தேவர் "செய்திக்குறிப்புக்கள்" என்றவுடன் எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. செய்திகளை ஸம்பாதித்து பத்ரிகாலயங்களுக்கு அனுப்பி வைக்கும் நிரூபகர்(நிருபர்)களின் போக்கு மிக வருந்தத் தக்கதாயிருக்கிறது. அவர்கள் அனுப்பும் செய்திகள் பெரும்பாலும் உண்மையின் கலப்புக்கூட அற்றனவாய் இருக்கின்றன. உதாஹரணமாய் ஒரு பத்ரிகையில் 'நாய் மனிதனைக்கடித்துவிட்டது' என்று ஒரு செய்தி வெளிவந்தால் அது செய்தியாகவே கருதப்படுவதில்லை. 'மனிதன் நாயைக் கடித்து விட்டான்' என்றவாறு முழுப்புரட்டாய் வெளிவரும் செய்திகளை வரவேற்கப்படுகின்றன. இதற்கு ஒருவாறு வாசகர்களின் மனப்போக்கும் காரணம்தான்.

ஒருவர்—ஆம்! அதனால்தான் நான் பத்ரிகைகளை விரும்புவதும் இல்லை. அவைகள் தரும் தகவல்களை நம்புவதும் கிடையாது. இப்படியிருக்கும் நிலையில், பத்ரிகைகளில் மதக்கோட்பாடுகளையும், ஸம்ப்ரதாயார்த்தங்களையும், விவரித்து வெளியிடுவது விரும்பத்தக்கது அல்ல என்பது என் அபிப்ராயம். அப்படி வெளியிட்டால் பெரும் மதிப்புக்குரிய அவைகள், அம்பலத்தில் அவிழ்த்துக்கொட்டப்பட்ட அவல் பொதி போல், மதிப்பு இழந்து, மிகுந்த ச்ரத்தையுடன் தம்மைப் பின்பற்றுவார் யாரும் இன்றி அழிந்து மறைந்துவிடக்கூடும். மேலும் அரசியல் ப்ரசாரத்திற்கும் மத ஸம்ப்ரதாய போதனைகளுக்கும் நெடுவாசியும் உண்டு.

மற்றொருவர்—இவ்விரண்டுக்கும் உள்ள வேற்றுமைகளை நானும் அறிந்துகொண்டிருக்கிறேன். அரசியல் ப்ரசாரத்தில்தான் ஜனத்தொகைக்குமதிப்பு உண்டு. ஒரு அரசியல்கட்சியின் கௌரவம் அதைப் பின்பற்றும் ஜனங்களின் ஸங்க்யையைப் பொருத்தது. அதனால் அரசியலில்ப்ரசாரம் இன்றியமையாததாகிறது. மதபோதனை விஷயமத்தகையதன்று. பெருங்கூட்டத்தைக்கூட்டி அதனிடையே வேதாந்த உபதேசம் செய்வதினும் தேசத்தின்பலபாகங்களிலும், ஆச்ரமம் போன்ற ஏகாந்தமான பல இடங்களில் இருந்து கொண்டு, தங்களை நாடி வித்யையைத்தேடிவரும் சிற்சிலசிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துவரும் ஆசார்யர்களின் செய்கையே பெரிதும் பயனளிக்கவல்லது. இப்படி குருகுல வாஸம்செய்துத் தேறிய சிஷ்யர்கள் மிகச் சிலரேயாக இருப்பினும், அவர்களாலேயே, ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயங்கள் உயிருடன் தழைத்தோங்கி வளர்ந்து வருகின்றன என்றால் அது மிகையாகாது.

ஒருவர்— இதைத்தான் நானும் சொல்ல வந்தேன். பெரும் பரப்பாகக் கணுக்கால் அளவு ஜலம் கொண்ட பெரிய நீர் தேக்கத்தை விட, சிறியவை ஆயினும் ஆழமான நீர் நிலைகளை பல காலம் வற்றாமல் உபயோகப் படுகின்றன என்பது லோகப்ரஸித்தம். ஆக நிதிபோல்மறைத்து ரக்ஷிக்கவேண்டியமஹார்த்தங்களை மற்றொரும் எளிதில் உணர்ந்துகொள்

ளும்படி வெளியிடுவது தவறேயாகும். ஸ்ரீ தேசிகன் நிக்ஷேபரக்ஷையில் ப்ரபத்தியின் ரஹஸ்யங்களை வெளியிட்ட தமது செய்கைக்கு வருந்தி, அதன் கடைசியில் ஸாதிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. **'विवृतमिह रहस्यं यन्मया गोपनीयं, स्खलितमपि यदीषत् भूयसा वा तदेतत्। निजमहिमविशेषप्रेममात्रेण नाथः, क्षमत इति विमृश्य क्षन्तुमर्हन्ति सन्तः ॥'** (மறையின்)மறைப் பொருளை இங்கு விவரித்த குற்றத்தையோ மற்றும் இங்கு நேர்ந்துள்ள, சிறிய அல்லது பெரிய தவறுகளையோ, ஈச்வரன் க்ஷமிக்கும் என்று நிச்சயித்து (அவன் திருவுள்ளப்படி நடக்கும் ஸ்வபாவமுள்ள) பெரியோர்களும் பொறுத்தருளவேணும்,என்று ஸ்வாமிப்ரார்த்திக்கிறார். ஆகையால் அந்தரங்க சிஷ்யர்களுக்கல்லது சொல்லவொண்ணாத விசேஷார்த்தங்களை பல பத்ரிகைகள் ப்ரசுரிப்பது கண்டு நான் வருந்தவே செய்கிறேன்.

மற்றொருவர்—தேவர் கடைசியில் சொன்ன விஷயத்தை நானும் ஒருவாறு ஒப்புக்கொள்கிறேன். ஆயினும் மதத்திற்கு ப்ரசாரமும் ஓரளவு வேண்டியதே. ஸ்ரீதேசிகனும் ரஹஸ்யத்ரயார்த்தத்தை வெளியிட நேர்ந்த ஸமயத்தில் வேண்டிய அளவு வெளியிட்டபிறகல்லவோ பெரியோர்களைபொறுத்தருளப்ப்ரார்த்தித்தார். இக்காலத்தில் நேர்ந்துள்ள மாறுதல்களையும் நாம் முக்யமாய் கவனிக்கவேணும். வர்ணாச்ரமாசாரப்படி ஒழுகிவந்த அக்காலத்திய ஜனங்கள் தமது தினசரியில் வேதாந்த ச்ரவணம் மநநம், முதலியன செய்ய தாராளமான அவகாசம் பெற்று இருந்தார்கள். வயிற்றுப் பிழைப்பேகுறிக்கோளாக உள்ள இக்காலத்திய ஜனங்களுக்கு அவர்கள் விரும்பிச் செல்லும் வழியில் ஊடேஊடே ஶாஸ்த்ரார்த்தசிந்தனைகளைப்புகுத்தி நிறுத்தினாலல்லது அவற்றில் கண்ணோட்டம் அறவே உண்டாகாது. அவர்களுக்கு உயர்ந்த கருத்துக்களில் இச்சையை உண்டாக்கின பிறகல்லவோ அவர்கள் ஆசார்யர்களை அடைந்து கடைத்தேற வழி பிறக்கும். மருந்தைக் குழந்தைகள் விரும்பும் சர்க்கரையில் கலந்து கொடுப்பது என்பது என்றும் உள்ள ஒரு வழக்கமாகும். அது போன்றதே இதுவும்.

ஒருவர்—அப்படியாகில் பழய காலத்திய குருகுல முறை என்பது ஒழிந்தே விடும். எவ்விதமான உபதேசங்களையும் பத்ரிகை மூலமாகவே ஜனங்களுக்குச் செய்து விடலாமே. பழயவழக்கத்தை மீற நினைத்தால் அதற்கு ஓர் எல்லை என்பது இல்லை அல்லவா?

மற்றொருவர்—உண்டியே உடையே என்று பாரித்து உள்ள காலமெல்லாம் ஓடித்திரியும் ஸம்ஸாரிகளுக்கு வலிய நாமே சென்றுதான் வேதாந்த ச்ரவணத்தில் ருசி உண்டாகும்படி செய்ய வேணும். அதற்காக வேண்டி மதத்தின் பொதுவான தத்வங்களை அவர்களுக்கு லேசாக அறிவிக்க பத்ரிகையின் உதவியை நாடினாலும் பிசகொன்றுமில்லை. **'ना पृष्टः कस्यचित् ब्रूयात्'** 'வினவாமல்இருக்கநாம் யாருக்கும் (வேதாந்த) உபதேசம் செய்யக்கூடாது, என்கிற கட்டளையை மீறினதாகவும் ஆகாது. 'வேதத்தினுட் பொருள்களை வினவாதார்க்கு வெளியிடலாகாது' என்றே அக்கட்டளையின் தாத்பர்யம். ஸ்தூலமான பொருள்களை யாரேனும் உபதேசிக்கலாம். ஆழ்ந்த கருத்துக்களை ஆசார்யனிடமே கேழ்க்கவேணும்.

ஒருவர்—இவ்விதம் தேவர் வரையறுத்துச் சொல்லுவதற்கு ஸாதகமாக யுக்தி தவிர வேறு ஏதாகிலும் ப்ரமாணம் உண்டா? இருந்தால் வெளியிடலாமே!

மற்றொருவர்—ஆம்! இதில் தகுந்த ப்ரமாணம் உண்டு. ஸ்ரீதேசிகன் ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபோத்காதாதிகாரத்தில் அநாதி காலமாய் மோக்ஷஸாசத்தை இழந்து ஸம்ஸரித்துப் போருமிஜ்ஜீவாத்மாவுக்குக்காட்டில் தமப்பனை விட்டுப்பிரிந்து வேடுவச்சேரியில் வளர்ந்து வரும் ராஜகுமாரனை உதாஹரணமாய்க்காட்டியருளினார். காலக்ரமத்தில், தன்னை 'வேடன்' என்றே நினைத்திருக்கும் அந்த அரசிளங்குமாரனுக்கு அவனுடைய ஜாதியுண்மை தெரிந்த சில தார்மிகர்கள் வலியச்சென்று அவன் ஒரு ராஜகுமாரன் என்பதை உணர்த்துகிறார்கள். அவ்விதமே இந்த ஸம்ஸாரி ஜீவனுக்கும் சிலர் உண்மை ஸ்வரூபத்தை உபதேசிக்கிறார்கள் என்னுமிடத்தை ஸ்ரீதேசிகன் வருமாறு ஸாதிக்கிறார். 'இவ்வாத்மாவுக்கு சில தார்மிகர்

பித்ராதி முகேந நோடித்து 'पुमान्नदेवो न नरः न पशुर्न च पादपः । शरीराकृति भेदास्तु भूपैते कर्मयोनयः' ॥ என்கிறபடியே ......நிலைமையை உணர்த்தி......நிறுத்தின வளவிலே, என்று 'தேவ, மநுஷ்ய, திர்யக், (ம்ருகங்கள்) தாவரங்கள் என்னும் நான்குவித தேஹங்களும் இஜ்ஜீவாத்மாவுக்குச் சொந்தமன்று. கர்மாக்களாலே ஏற்பட்டவை, என்ற இப்பொதுவான ஶாஸ்த்ரார்த்தத்தை சில தார்மிகர்கள் தாங்களாகவே சென்று ஜீவனுக்கு உபதேசிக்கிறார்கள் என்றபடி. இவ்வித உபதேசத்தின் ஸ்தாநத்தில் இக்கால மாறுதல்களையநுஸரித்து பத்ரிகைமுதலியப்ரசாரஸாதநங்களைக்கொண்டு நாம் உதாஹரணத்தைப் பூர்த்தி செய்து கொள்வோம். இவ்விதம் சில தார்மிகர் உபதேசத்தால் தன் ஜாதியை உணர்ந்திருக்கும் ராஜகுமாரனைப் பிறகு ராஜாந்தரங்காதிகாரிகள் சிலர் நெருங்கி, மேல் வரப்போகிற ப்ரியங்களையும், அவன் வினவியதின் பின் அவனுக்கு விளக்கி, அவனுக்கும் அவன் பிதாவுக்கும் பரஸ்பரம் சேர்த்தியில் அவா உண்டாகுமாறு செய்கிறார்கள். அவ்விதமே இஜ்ஜீவாத்மா விஷயத்தில் நடப்பதையும் மேல்வரும் ஸ்ரீதேசிக ஸூக்தியாலேயும் காட்டுகிறேன். 'இவனுடைய......சில தார்மிகர் அடியாகவந்த யோக்யதையை......நேராகக் கண்டு......பரம காருணிகராய் இருப்பார் சில தேசிகர் (ஆசார்யர்கள்)......நேர்பட்டு, இவனுக்கு 'नायं देवो नमर्त्यो वा न तिर्यक्स्थावरोपि वा । ज्ञानानन्दमय स्त्वात्मा शेषो हि परमात्मनः' ॥ என்று ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே...... ஶ்ரிய:பதியான நாராயணனோடு குடல் துவக்கைத்தெளிவித்து, இத்யாதி. முதலில் சிலர் பொதுவான ஶாஸ்த்ரார்த்தங்களை உணர்த்தி மீண்ட பிறகு, இஜ்ஜீவன் ஆசார்யனை அடைந்து வேண்ட, அவ்வாசார்யன் இவனுக்கு 'தேஹம் கர்மாதீனம்' என்று முன் சொல்லப்பட்டாற்போல் உள்ளஸாமாந்யார்த்த உபதேசத்தோடு நில்லாமல் 'ஜ்ஞாநாநந்தஸ்வரூபனான இஜ்ஜீவன் பரமபுருஷனுக்கு தாஸன்' என்றவாறாக உள்ள ரஹஸ்யார்த்தங்களையும் உபதேசிக்கிறான் என்றவாறு. ஆகையால் மதம் ஸம்ப்ரதாயம் இவை பற்றின ஸாமான்யார்த்தங்களையாரேனும் எவ்விதமேனும் வெளியிடலாமென்பதும், விசேஷார்த்தங்கள் உபதேசிப்பதுபற்றியே மிகுந்த நியமம் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டது என்பதும் மேல்காட்டப்பட்ட ஸ்ரீஸூக்தியின் பத, வாக்ய, ஸ்வாரஸ்யம் தெரிந்தமஹான்களுக்கு விசதமே. இதை தேவரும் ஒப்புக்கொள்ளும் என்றே நினைக்கிறேன்.

ஒருவர்— ஸ்ரீ தேசிக ஸூக்தியின் உட்கருத்து தேவர் சொன்னபடிதான் உள்ளது என்ற விஷயம் எனக்கு இப்பொழுதுதான் விளங்கியது. இனிமேல் இதை ஆக்ஷேபிக்க முடியாது. ஆயினும் தேவர் சொன்ன தர்ம நியதிக்குட்பட்டு உலகுச்கு உபதேசம் செய்யும் பத்ரிகை ஒன்று இரண்டு இருக்கலாமோ என்னமோ? பெரும்பாலும் பத்ரிகைகள் பெரியோர்மனத்தைப்புண்படுத்தும் வகையிலேயே எழுதி வருகின்றன. சில பத்ரிகைகள், சொற்பொருள் நயங்களைப்பெற்று இருந்தும் விசேஷார்த்தங்களை விளக்கும் வ்யாஜத்தால் அளவுக்கு மீறி அன்யர்களை தூஷித்து வருகின்றன. மற்றும் சிலபத்ரிகைகள், அடுக்குமொழிகளை அள்ளித்தெளித்து, படிப்பவர் மனத்தை மழுங்கும்படி செய்து, இரண்டு பக்கங்கள் படித்தாலும் திரண்ட பொருள் இன்னதென்று விளங்காத வகையில், மிக மிக நவீனமான முறையில், ஸ்தூல ஸூக்ஷ்மார்த்த வ்யவஸ்தையின்றி, வ்யாஸங்களை வெளியிட்டுவருகின்றன.

ஆகையால் 'भगवत्बोधायनकृतां विस्तीर्णां ब्रह्मसूत्रवृत्तिं' என்றபடி, மிகுந்த பரப்பும் அற்று 'पूर्वाचार्याः संचिक्षिपुः' என்றபடி மிகுந்த சொற்செட்டும் இன்றி, விளங்கிவரும் எம்பெருமானாருடைய ஸ்ரீபாஷ்யம் போல் அதிஸரளமான நடையில், ப்ராசீன, நவீன காலங்கள் இரண்டுக்கும் நடுக்கண்டதான ஒரு வழியைப் பின்பற்றி தர்மோபதேசம் செய்து வரும் "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா" போன்ற பத்ரிகைகளை, நெடுங்காலம் நிலைத்திருந்து, நல்லவர்களின் நன்மதிப்புக்குப் பாத்ரமாகத் தகுதியுடையவைகள் என்பது என் அபிப்ராயம்.

இங்ஙனம் முடிவடைந்த இந்த ஸம்பாஷணையின் ஸாராம்சத்தை பெரியவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் அடியேனுக்குச் சிறிதளவும் ஸம்சயமில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீ பாகவதத்தில் சில தர்மங்கள்

(பிசாசபீடையும் அதன் பரிஹாரமும்)

உலகத்தில் பிசாச பீடைகள் அங்கங்கே தோன்றுவதும் அவற்றிற்குப் பரிஹாரங்களாக தங்கள் தங்கள் ஜாதி குலாசாரங்களுக்குத் தகுந்தவைகளாயும், சிற் சில விடங்களில் ஜாதி குலாசாரத்தொழில்களுக்கு முற்றும் முரணாகவும் சில கார்யங்கள் செய்யப்பட்டு வருவதை நாம் தினம் காண்கிறோம். முதலில் பிசாசம் என்பதே உண்மையில் இல்லை யென்றும், பிசாசோபத்ரவம் சில காண்பவை ஏதோ வியாதியால் ஏற்பட்டவை என்றும், அவற்றிர்க்குப் பரிஹாரம் வைத்ய சிகித்ஸைதான் என்றும் தத்கால விஜ்ஞானிகள் பலர் கூறுகின்றனர். மேனாட்டுப் படிப்பின் ஸம்ஸ்காரம் ஏறியவர்களுக்கு பிசாச விஷயத்தில் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. இருந்தாலும் அவர்களும் சில காலம் வைத்ய சிகித்ஸை செய்து பார்த்து நீங்காத உபத்ரவத்திற்கு அப்பிசாசத்தை விரட்டக்கூடிய மந்திர ப்ரயோகம் முதலியதைக் கொண்டோ தேவதா ப்ரார்த்தனை மூலமோ கடைசியில் பரிஹாரம் தேடுவதும், அதன்பின் அது சாந்தமாவதும் அங்கங்கு காணப்பட்டு வருகிறது. இருந்தாலும் முன் செய்த வைத்யமே நாள் கழித்து பலித்து சாந்தியை உண்டாக்கியதென்றும் அவர்கள் சொல்லத் துணிகிறார்கள். வைத்யமே செய்யாமல் பிசாச சாந்தி மாத்திரம் செய்யப்பட்டு அத்துன்பம் நீங்கினவிடங்களைப் பார்த்தாவது அவர்களுக்கு நம்பிக்கையுண்டாகாதோ வெனில் அதுவுமில்லை. அங்கும் காலக்ரமத்தால் அந்த வியாதி நீங்கிவிட்டதாகவும் இந்த சாந்தி ப்ரயோகம் வீணானதே யென்றும் அவர்கள் மனமொப்பியோமனமொப்பாமலோ ஸபைகளிலும் கூற முன்வருகிறார்கள். இதன் உண்மை எப்படியிருந்தாலென்ன? சாந்தி ப்ரயோகங்களாலும் தேவதா ப்ரார்த்தனையாலுமே அவ்வுபத்திரவம் நீங்கியிருப்பதை நாம் நேரில் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம்.

உலகத்தில் அவரவர்கள் பிறந்த வேளையை ஸரியானபடி யறிந்து அதை யநுஸரித்து ஜாதகங்கள் கணிக்கப்பட்டு அதன் மூலம் அவர்களுக்குப் பிற்காலத்தில் வரவேண்டிய பலவிதமான ஸுக துக்கங்களை முன் கூட்டியறிந்து அவற்றிற்குத் தகுந்தவாறு அவரவர்கள் நடந்து கொள்வதும் சில விடங்களில் முன் ஜாக்ரதையாக இருப்பதும் சில விஷயங்களில் தகுந்த பரிஹாரம் செய்து வரவேண்டிய துன்பங்களைத் தவிர்த்துக்கொள்வதும் எல்லோருமறிந்ததே. மேனாட்டுப் படிப்பு நிறைந்த வைத்யர்களும் தம் குழந்தைகளுக்கு ஜாதகப் பொருத்தம் முதலியதை நன்கு ஆராய்ந்தே விவாஹம் முதலியதைச் செய்வதை நாம் அடிக்கடி காண்கிறோம். நம்பிக்கை இருப்பினும் இல்லாவிடினும் நல்ல மருந்தை உபயோகித்தால் அது தன் வேலையைச் செய்தே தீருகின்றது. தெரியாமல் அருந்தியவிஷமும் அருந்தியவனை உபத்ரவிக்காமல் விடுமோ? அதேபோல் சாந்தி ப்ரயோகம் முதலியதும் அவனுக்கு ஸுகத்தை கொடுக்காமலிருக்கமாட்டாது, என்பது ஆஸ்திகர்களின் வாதம்.

மனிதர்களுக்கு அவரவர்கள் செய்த புண்ய பாபாநுகுணமாக வரவேண்டிய ஸுகமோ துக்கமோ இரண்டும் நவக்ரஹ தேவதைகளின் மூலமாக வருவதாக ஜோதிஷ சாஸ்திரம் கூறுகின்றது. அந்த விஷயத்தை அவரவர்களின் பிறந்த காலத்தில் நவக்ரஹங்கள் இருக்குமிடங்களை யநுஸரித்து ஜோதிஷம் தெரிந்தவர்களால் எழுதிவைக்கப்பட்ட ஜாதகங்களின்மூலம் அறிகிறோம். இதற்கெனவே ஒவ்வொருவருக்கும் உலகத்தில் ஜாதகம் கணிக்கப்பட்டு வருகிறது. இந்த ஜாதகங்கள்மூலம் எந்தெந்த காலங்களில் எந்தெந்த க்ரஹங்கள் மூலம் ஸுகம் ஏற்படக் கூடுமோ அதை முன்னாடி தெரிந்து கொண்டு அந்தந்தக்ரஹங்களை விசேஷமாக அர்ச்சித்தால் அந்தந்த ஸுகங்களை விசேஷமாகப் பெறலாம். துக்கம் வரவேண்டிய காலங்களிலும் அந்த

க்ரஹங்களிலும் அந்த க்ரஹங்களை அர்ச்சித்தால் அவர்கள் கொடுக்கவேண்டிய துக்கங்கள் குறையக்கூடும். முற்றிலும் மாறவும் கூடும். இவ்வாறு ஶுபஸ்தானத்திலும் அஶுபஸ்தானத்திலும் அமைந்திருக்கும் க்ரஹங்களைத் தெரிந்து கொண்டால் அல்பாநுகூலர்களை பூர்ணாநுகூலர்களாகவும், பூர்ணாநுகூலர்களை அதிகப்படி பலன் கொடுப்பவர்களாயும் அவ்வாறே அல்ப ப்ரதிகூலர்களை அவர்களின் ப்ராதி கூல்யம் தீரும்படியும் பூர்ணப்ரதிகூலர்களை அவர்களின்ப்ராதிகூல்யம்ஒருவாறு மிகக் கடுமையாயில்லாமல் மறுபடியும் செய்து கொள்ள வழிஏற்படுகின்றது. சில ஸமயங்களில் சிலருக்கு ஜாதகங்களில் குறிப்பிடப்பட்ட அம்சங்கள் கொஞ்சமும் பலிக்காமலேயே போய் விடுகிறதே யெனில், அது அந்த ஜாதகத்தை கணித்தவர்களின் கவனக் குறையாலுண்டான குற்றத்தாலாகும்.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் பேதத்தால் மனிதர்கள் மூன்று விதமாயிருப்பார்கள். அவர்களில் ஸாத்விகர்கள் இந்திரன், அக்நி, விஷ்ணு முதலிய தேவதைகளை அர்ச்சிப்பார்கள். ராஜஸர்கள் யக்ஷர்களையும், ராக்ஷஸர்களையும் பூஜிப்பார்கள். தாமஸர்கள் பூதங்களையும், ப்ரேதங்களையும், பிஶாசங்களையும் அர்ச்சிப்பார்கள். அப்படி அர்ச்சிக்கப் படும் தேவதைகளும் ‚ஸாத்விக தேவதைகள் என்றும், ராஜஸ தேவதைகளென்றும், தாமஸ தேவதைகளென்றும்’ மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டு முறையே மூன்று விதமான ஸாத்விக, ராஜஸ, தாமஸ பலங்களை கொடுக்க வல்லவர்களென்றும் பகவத்கீதை முதலியவற்றில் கூறப்படுகின்றது. அஸுரர்கள், ராக்ஷஸர்கள், கின்னரர்கள், யக்ஷர்கள், பூதங்கள், ப்ரேதங்கள், பிஶாசங்கள் முதலியவர்களும் தேவதாவர்க்கத்தில் சேர்ந்தவர்கள். மனிதர்களைவிட விசேஷ சக்தி வாய்ந்தவர்கள். நினைத்த ரூபத்தை எடுத்துக் கொள்ளக் கூடியவர்கள். மனிதர்களின் கண்ணுக்குப் புலப்படாமல் சில ஸமயங்களில் வர்த்திக்கத்தகுந்தவர்கள். தங்களை உபாஸிப்பவர்களுக்கு அபேக்ஷித பலன்களைத் தங்களாலியன்றவரை அளிக்கக் கூடியவர்கள்’ என்று புராணங்களை கவனிக்குமவர்களுக்கு நன்கு புலப்படும். நம் நாட்டிலும் பலர் இன்றைக்கும் பூத ப்ரேத பிசாசங்கள் என்கிற சில க்ஷுத்ர தைவங்களை உபாஸித்து அவற்றின் அருளால் பிறரிடமில்லாத சில சக்தி விசேஷங்களைப் பெற்று அதன் மூலம் மற்றவரை ஏமாற்றியோ பயமுறுத்தியோ பணம் பெற்று ஜீவிக்கிறார்கள் என்பது யாவருமறிந்த விஷயமே.

நம் நாட்டில் மனிதர்களின் தேஹத்தில் பல வியாதிகள் உண்டாகின்றன. அவை கேவலம் ஆஹார தோஷத்தாலும், செயற்கைதோஷத்தாலுமே உண்டாகின்றன என்று விஜ்ஞானிகளின் எண்ணம். இந்த ஜன்மத்திலோ பூர்வ ஜன்மத்திலோ செய்த வினைப்பயனாக வருகின்றன வென்று சிலர் சொல்லுவர்கள். அதிலும் இவர்களின் புண்யபாப ரூபமான கர்மங்களால் ப்ரீதி கோபங்களை யடைந்த தேவதைகளால் உண்டாக்கப்பட்டவை என்று வைதிகர்களின் அபிப்ராயம். ‘ஜந்மாந்தரக்ருதம் பாபம் வ்யாதிரூபேண பாததே । தச்சாந்திரௌஷதைர்தாநைர்ஜபஹோமார்ச்சநாதிபி:’ ॥ முன் ஜன்மத்திய பாபத்தால் வியாதி உண்டாகின்றது. அதற்கு பரிஹாரம் மருந்தாலும், தானங்களாலும், ஜபங்களாலும், ஹோமங்களாலும், தேவதார்ச்சனத்தாலும் ஏற்படுமென்று தர்மஶாஸ்திரம்.

ஒவ்வொரு மனிதனையும் ஸ்ருஷ்டித்த ஸர்வேச்வரன் அவரவர்களை அடக்கியாளுவதற்கும் அவரவர் கர்மாநுகுணமாகப் பெறுவதற்கும் த்வாரமாக நவக்ரஹ தேவதை முதலிய சில தேவதைகளையும் ஏற்படுத்தி அவர்கள் மூலம் ஸுக துக்கங்களைப் பெறும்படியும் மற்றும் சில ப்ரபல தேவதைகளின் மூலமாக இவர்கள் அபேக்ஷிக்கும் சில விசேஷ பலன்களையும் கொடுக்கும்படி செய்தும், இவ்வாறே அந்தந்த தேவதைகளின் கர்மாநுகுணமாக அவர்களுக்கு சில சக்தி விசேஷத்தையும், ஐச்வர்யத்தையும் கொடுத்தும், அந்த ஐச்வர்யத்தை அபேக்ஷிக்கின்றவர்களுக்கு அதை விநியோகப்படுத்தும்படி இத்தேவதைகளை நியமித்தும், அதற்கு அநுகுணமாக சிலர்களை இவர்களுக்கு ஆளத் தகுந்தவர்களாக்கியும் இந்ததேவதைகளை அவர்

களுக்கு உபாஸ்யர்களாகச் செய்தும், மற்றும் சில ப்ரபல தேவதைகளை உபாஸிப்பார்க்கு அவர்கள் மூலம் அவ்வொ பல விசேஷங்களை உண்டாக்கியும் இவற்றை யெல்லாம் தெரிந்து கொள்ள அபேக்ஷிதமான இந்திரியங்களையும், ஶக்தியையும், ஶாஸ்த்ரத்தையும்; கொடுத்தும் நல்வழி நடக்கும்படி செய்கிறான். அவர்கள் வழி தவறினபோது அந்த தேவதைகள் மூலம் அவர்களை சிக்ஷித்தும், அத்யந்த விபரீதர்களை மிகக் கடுமையாக சிக்ஷித்தும், சுத்தர்களாக்கிக் கடைசியில் பரமபதம் சேரும்படியும் செய்கிறான் என்றும் வேதாந்த ஶாஸ்திரம் கூறுகின்றது. இப்படி இதர தேவதைகள் மூலம் அவரவர்கள் அபேக்ஷித்த பலன்களைப் பெற்றாலும் வஸ்துஸ்திதியில் அந்தந்த தேவதையின் உபாஸனத்தால் அவ்வோ தேவதைகளுக்கு அந்தர்யாமியான ஸர்வேச்வரனே அந்த தேவதைகள் மூலம் ப்ரஸன்னனாய் அவரவர்களுக்கு அபேக்ஷித்த பலன்களைத் தருகிறான் என்றும் பகவத் கீதாதிகளில் சொல்லப்படுகிறது.

ஸ்ரீமத்ராமாயணத்தின் மூலம் ராக்ஷஸர்கள் மனிதர்களைவிட விசேஷ சக்தி வாய்ந்தவர்கள் என்றும் நினைத்த உருவத்தை அவ்வப்போது எடுத்துக்கொள்ளக் கூடியவர்களென்றும் சில ஸமயங்களில் கண்ணுக்குத் தெரியாமலிருக்கக் கூடியவர்களென்றும், வைதிகர்களின் யஜ்ஞங்களுக்கு விரோதம் செய்யக்கூடியவர்களென்றும் நன்கு புலப்படுகின்றது. ராமாயணத்தில் தசரதனின் அச்வமேதயாக ப்ரகரணத்தில் 'சித்ரம் ஹி ம்ருகயந்தேத்ர வித்வாம்ஸோ ப்ரஹ்மராக்ஷஸா:' (பால-8-16) என்று கூறினார் வால்மீகி. வாங்கத்தகாத தானங்கள் வாங்கியோ யாகம் செய்யத்தகாதவர்களுக்கு யாகம் செய்து வைத்தோ பாபமுண்டாய் அவற்றிற்கு ப்ராயச்சித்தம் செய்து கொள்ளாததால் அந்த ப்ராஹ்மணர்கள் யாகஸ்வரூபமறிந்த வித்வான்களாயிருந்தே ராக்ஷஸ ஜன்மத்தை யடைந்து எங்காகிலும் யாகங்களில் ஸ்வல்பமான அபராதமிருந்தபோதிலும் அந்த யாகங்களில் தாங்கள் புகுந்து அவற்றை அசுத்தமாக்கி பாழாக்கி விடுகிறார்கள் என்று அந்த ச்லோகத்திற்கு வ்யாக்யானம். இத்தகைய ராக்ஷஸர்கள் அங்கு வரவொட்டாமல் தடுப்பதற்காகவே ப்ரவர்க்யம் (ப்ரவர்க்யம்) உபஸத் (உபஸத்) முதலிய கார்யங்கள் செய்யவேண்டியவைகளாக ஏற்பட்டிருக்கின்றன. விச்வாமித்ர யாகரக்ஷண காலத்திலும் மாரீசன் முதலிய ராக்ஷஸர்கள் யாகத்திற்கு இடையூறு விளைவித்தார்களென்றும், ப்ரவர்க்யம் (ப்ரவர்க்யம்) முதலிய ராக்ஷஸ விநாசகமான கார்யங்கள் ஸுபாகு மாரீசர்கள் மிகவும் பலிஷ்டர்களானபடியால் அவர்களைத் தடுக்க முடியாமல் ஸ்ரீ ராமனுடைய ஸஹாயம் கோறப்பட்டதென்றும் வெளிப்படையான விஷயம்.

இந்த ராக்ஷஸர்கள் யாக விக்நம் ஏன் செய்யவேண்டுமெனில் இவர்களின் முன் ஜன்மத்திய கர்மபலமான ரஜோகுண தமோகுணங்களின் மிகுதியாலும் ஐச்வர்யம் அதிகாரம் தேஹபலம் இவற்றின் மிகுதியாலும் கொழுத்துப்போய் நல்லகார்யங்களுக்கு நிஷ்காரணமாகவே விக்நம் செய்யக்கூடும். சிலர் தங்களுக்கு பூஜை உபஹாரம் முதலியன கொடுக்க ஏற்பட்ட தங்கள் குடிமக்கள் நல்லகார்யங்கள் செய்து தங்களிடமிருந்து தப்பிவிடுவார்களே என்ற பயத்தாலும் விக்நம் செய்கிறார்கள். ஸத்வப்ரதானர்களான தேவர்களே 'ஸம்ஸார ந்ருத்யநதாஸீதாஸ்த்ரீஷ்வமா: வஸிவந்தி ந:' என்றும், 'ஸத்யம் ஶதேந விக்நாநாம் ஸஹஸ்ரேண தயா தப: விக்நாயுதேந கோவிந்தே ந்ருணாம் பக்திர் நிவார்யதே' என்றபடி நல்லகார்யங்களுக்கு செய்கிறார்கள் என்றிருக்க ராக்ஷஸர்கள்விஷயத்தில் சேழ்க்கவேண்டுமோ? இந்திரன் முதலான தேவதைகளை எத்தனையோ அச்வமேத யாகங்களை பூர்ணமாகாதபடி கெடுத்தும் பல மஹர்ஷிகளின் தபஸ்ஸைநிறைவேறவொட்டாமலும் தடுத்திருக்கிறார்கள் என்றும் புராணங்கள் கூறுகின்றது. தனக்குக் கிடைக்கவேண்டிய பூஜை நின்றுவிட்டதே யென்று கோபத்தால் கோவர்த்தன பூஜையின் போது கோகுலத்திற்கும் கோபாலர்களுக்கும் எவ்வளவோ விரோதம் செய்து கடைசியில் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பெருமையை நேரில் கண்டு இந்திரன் உணர்ச்சி பெற்று மீண்டான் என்று ஸ்ரீ பாகவதம்.

(தொடர்ச்சி 87-ம் பக்கம் பார்க்கவும்)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

14-12-53 பகல் 2 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள அக்யபால் ந்ருஸிம்ஹன் கோயிலுக்கு எழுந்தருளினார். அக்கோயிலுக்கு வெகு அருகாமையில் ஹைமவதி நதி வெகு அழகாக ஓடுகிறது. அங்கிருந்து 12 மைல் தூரமுள்ள ஸாளக்ராம க்ஷேத்திரத்திற்கு 15-12-53 பகல் 3 மணிக்கு புறப்பட்டு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ மாலோலன் அவ்வூர் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் கோயிலில் வீற்றிருந்தார். இரவு 9 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கரால் தநுர்மாஸ ஆராதனம் ஆரம்பிக்கப்பட்டது. 16-12-53 காலை அபிகமன ஆராதனம் நடந்ததும் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ பாத தீர்த்தம் சேர்த்த கிணற்றிற்கு எழுந்தருளி அத்தீர்த்தத்தை ஸ்ரீ அழகியசிங்கர் தாம் ஸ்வீகரித்துக்கொண்டு சிஷ்யர்களுக்கு ஸாதித்தாயிற்று. அன்று பகல் 3 மணிக்கு புறப்பட்டு அக்யபால் எழுந்தருளியாயிற்று. 17-12-53 பகல் 3 மணிக்கு புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள க்ருஷ்ணராஜபேட் சத்திரத்திற்கு எழுந்தருளியாயிற்று. மறுபடியும் அங்கிருந்து 12 மைல் தூரமுள்ள திருநாராயணபுரத்திற்கு 18-12-53 மாலை 6 மணிக்கு எழுந்தருளினார். 20-12-53 பகல் 3 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் அவ்வூர் கோட்டை வாயில்களையும் பார்வையிட்டு வேத தீர்த்தம் முதலிய ப்ரஸித்த 8 தீர்த்தங்களுக்கும் எழுந்தருளியாயிற்று. திருநாராயணபுரத்திலும் ப்ரஸித்த வித்வான்களை ஆஹ்வானம் பண்ணி எல்லா ஶாஸ்த்ரங்களிலும் வாக்யார்த்தம் சொன்னதைக் கேட்டு மகிழ்ந்து உசிதமான ஸம்பாவனை ஸ்ரீ அழகியசிங்கரால் பண்ணப்பட்டது. 21-12-53 ல் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கர் 10 வது மாஸ ஆராதனம் வெகு விமர்சையாக நடத்தப்பட்டது. 1-1-54 ல் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் வருஷ திருநக்ஷத்திரம் 5 நாள் முன்னதாகவே வேத, ப்ரபந்த, புராணபாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு ஸ்ரீ அழகியசிங்கரால் வெகு விமர்சையாக நடத்தப்பட்டது.

3-1-54 ல் ஸ்ரீ அழகியசிங்கர் கிரிப்ரதக்ஷிணம் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ ந்ருஸிம்ஹன் வீற்றிருக்கும் மலையின் நின்றும் விழுந்திருக்கும் பாறை மிகவும் பார்ப்பதற்கு ஆச்சர்யமாக இருக்கிறது. 6-1-54 ல் திருநாராயணபுரத்திலிருந்து 12 மைல் தூரமுள்ள தொண்டனூருக்கு எழுந்தருளினார். 7-1-54 ல் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ கண்ணனுக்கு திருமஞ்சநம் பண்ணி பாஷ்யகாரர் முதல் ப்ரஸித்தமான ஏரியில் தீர்த்தவாரி செய்தாயிற்று. சிஷ்யர்கள் 'அஹோ பாக்யம்' என்று அந்த உத்ஸவத்தை அநுபவித்தார்கள். அன்றிரவே அங்கிருந்து புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கர் அவ்வூரிலுள்ள ஸ்ரீ ந்ருஸிம்ஹனையும், ரங்கநாதனையும் மங்களாஶாஸநம் பண்ணியாயிற்று. இவ்வூரில் காவேரி நதி இருபக்கத்திலேயும் ஓடுகிறது. பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறது. அங்கிருந்து 16 மைல் தூரமுள்ள பன்னூருக்கு எழுந்தருளினார். இவ்விடத்தில் ராமர் கோயிலில் தங்கியிருந்தார். இங்கிருந்து 8 மைல் தூரமுள்ள சோஸலேக்கு எழுந்தருளினார். இவ்வூரில் உள்ள மானேஜர் ரங்கஸாமி ஐயங்கார் என்பவர் தன்னுடைய க்ருஹத்தில் ஸ்ரீ மாலோலனை எழுந்தருளப் பண்ணி மிகவும் நன்றாக ஆராதித்தார். அங்கிருந்து 4 மைல் தூரமுள்ள டி. நரஸிப்பூருக்கு எழுந்தருளினார். இவ்வூரில் முத்து என்கிற ஸ்ரீநிவாஸ ஐயங்கார் க்ருஹத்தில் எழுந்தருளி இருந்தார். இவருடைய குமாரரான டி. எஸ் ராஜகோபால ஐயங்கார் ஒரு நாள் ஸ்ரீ மாலோலனை வெகு நன்றாக ஆராதித்தார். 11-1-54 மாலை 6 மணிக்கு கண்ட்ராக்டர் ராம ஐயங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். இவ்வூரில் 4 தினங்கள் தங்கியிருந்தார். ஸ்ரீ அழகியசிங்கர் இவ்வூர் குஞ்சா ந்ருஸிம்ஹனை மங்களாசாஸநம் செய்தருளினார். இவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடத்தை ஸரியாக கட்டுவதற்கும் அதற்கு தக்க ப்ருமுகர்களைக்கொண்டு ஏற்பாடு செய்தார். இவ்வூரில் காவேரியும், கபிலையும் ஸங்கமம் ஆகிறது. ஸ்படிக நதி அந்தர்வாஹினீ என்றும் ஆகையால் ப்ரயாகையைக் காட்டிலும் இந்த க்ஷேத்ரத்திற்கு குந்தமணி இடைமஹிமை அதிகம் என்று ந்ருஸிம்ஹன் காட்டுகிறார். அத

ஞானலயே பெருமாளுக்கு குஞ்சா ந்ருஸிம்ஹன் என்று திருநாமம் வந்தது என்று ஐதிஹ்யம் சொல்லுகிறார்கள். அங்கிருந்து 14-1-54 பகல் 3 மணிக்குப் புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள மாஹள்ளி முஸாபிரி பங்களாவிற்கு எழுந்தருளியாயிற்று. அங்கிருந்து 15-1-54 பகல் 1 மணிக்குப்புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள சாமராஜநகர் சத்திரத்திற்கு எழுந்தருளினார். அவ்வூர்வாஸிகள் மிகவும் பக்திச்ரத்தையுடையவர்களாக இருந்தார்கள். அவ்விடத்திலிருந்து 6 மைல் தூரமுள்ள வெங்கடேசன் சத்திரத்திற்கு எழுந்தருளினார். இவ்வூர் ஸ்ரீநிவாஸன் கோயிலில் தங்கியிருந்தார். அங்கிருந்து 8 மைல் தூரமுள்ள பிளிஞ்சியூர்பாரஸ்ட் பங்களாவிற்கு எழுந்தருளினார். இங்கு மிக ஸமீபத்தில் ஒரு காட்டாறு ஓடுகிறது. இங்கிருந்து யானைமுதலிய துஷ்ட மிருகங்கள் வஸிக்கக்கூடிய பயங்கரமான காடு ஆரம்பம். அத்துடன் வண்டி போகும் பாதை மலையில் ஏறுகிறது. அங்கிருந்து 18-1-54 பகல் 1 மணிக்கு புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள மலை உச்சியில் இருக்கிற திம்பம் பாரஸ்ட் பங்களாவிற்கு எழுந்தருளினார். அங்கிருந்து கீழ் அடிவாரம் 7 மைல் இருக்கிறது. கீழே பார்ப்பதற்கு மிக பயங்கரமாக தோன்றுகிறது. அங்கிருந்து கீழேஇறங்குவதற்கு 27வளைவுகளுள்ள ராஸ்தா மிகவும் பயங்கரமாக இருக்கிறது. இங்கிருந்து 19-1-54 பகல் 2 மணிக்குப் புறப்பட்டு 17 மைல் உள்ள ஸத்யமங்கலம் லக்ஷ்மீநாராயணன் கோயிலுக்குஸ்ரீமாலோலன் ஸமஸ்த பரிவாரங்களுடன் புறப்பட்டு ஸுகமாக எழுந்தருளினார். 20-1-54 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கரின் 11-வது மாஸாராதனம் ஸ்ரீ அழகியசிங்கரால் மிகவும் விமர்சையாக நடத்தப்பட்டது. ஊருக்கு மிக அருகாமையில் பவானி நதி மிக அழகாக ஓடுகிறது. இவ்வூரிலுள்ள எல்லா ஜாதியினரும் அதிக தைவ பக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அன்றிரவு அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீ அழகியசிங்கர் 'ஆசாரம்'என்னும் விஷயத்தைப்பற்றி வெகு நன்றாக உபந்யஸித்தாயிற்று. ஜனங்கள் கேட்டு ஆனந்தமடைந்தார்கள். அன்றிரவே 12 மைல் தூரமுள்ள பிளியம்பட்டி சத்திரத்திற்கெழுந்தருளினார். அங்கிருந்து21-1-54 இரவு புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள அன்னூருக் கெழுந்தருளினார். அங்கிருந்து அன்றிரவே 8 மைல் தூரமுள்ள கோயில் பாளையத்திற்கு எழுந்தருளினார். இவ்வூர் சத்திரத்தில் ஸ்ரீமாலோலன் எழுந்தருளினார். இவ்வூருக்கு கோயம்புத்தூரிலிருந்து எல்லா ப்ரமுகர்களும் வந்து ஸ்ரீ அழகியசிங்கரை ஸ்ரீமாலோலனுடன் தங்களுடைய ஊருக்கு எழுந்தருளி அநுக்ரஹிக்கவேண்டு மென்று ப்ரார்த்தித்தார்கள். 23-1-54 ல் கோயில்பாளையத்திலிருந்து பகல் 2 மணிக்குப் புறப்பட்டு மாலை 5 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் தன்னுடைய ஸமஸ்த பரிவாரங்களுடன் 12 மைல் தூரமுள்ள கோயம்புத்தூர் புது அக்ரஹாரம் பிரிவில் எழுந்தருளும் தருவாயில் இவ்வூர் வைதிக லௌகிக எல்லா ப்ரமுகர்களும் பூரண கும்பம் முதலியவைகளுடன் எதிர்கொண்டு வரவேற்றார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் ஸமஸ்தபிருதுகளுடன் சில முக்யமான வீதிகளின் வழியாக எழுந்தருளி இரவு 7 மணிக்கு ஸி. வி. பாஷ்யமய்யங்கார் பங்களாவிற்கு எழுந்தருளினார். 24-1-54 காலை 8 மணிக்கு 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கர் வருஷதிருநக்ஷத்திரத்தை முன்னிட்டுஸ்ரீ அழகியசிங்கரால்வேத, ப்ரபந்த புராண பாராயணாதிகள் ஆரம்பிக்கப்பட்டது. 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கரால் ஆரம்பிக்கப்பட்டு 12 வருஷ காலமாக நடந்து வந்த மாலோல வித்வத் ஸதஸ் வழக்கம் போல் 10 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கரால் ஆரம்பிக்கப்பட்டது. 10 தினமும் பாராயணங்களும் ஸதஸ்ஸும் வெகு விமர்சையாக நடந்தது. அன்றைய தினம் ஸ்ரீமாலோலனை ஸ்ரீபாஷ்யமய்யங்கார் விசேஷமாக ஆராதித்தார். இவ்விடத்தில் 5 தினங்கள் தங்கியிருந்தார். பாராயணங்கள் நடக்கும் அழகையும் ஸதஸ் நடக்கும் ரீதியையும் நேரில் பார்த்தவர்களுக்குத்தான் அதன் மேன்மை விளங்கும். சொல்ல இயலாது. பாக்யம் உள்ளவர்களே கண்டு அநுபவித்தார்கள்.

28-1-54 இரவு 8 மணிக்கு இங்கிருந்து ராமநகரிலுள்ள ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். அவரால் ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவம் வெகு விமர்சையாகப் பண்ணப்பட்டது. பிறகு 11 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு ராஜவீதியிலுள்ள எம்.எல். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். 29-1-54 ல் ஷஷ்டிஸ்வாமியால் ஸ்ரீமாலோலன் மிகவும் நன்றாக ஆராதிக்கப்பட்டார். 29-1-54 இரவு ஸ்ரீ ஸ்ரீநிவாஸஅய்யங்கார் க்ருஹத்திலிருந்து புறப்பட்டு அதே வீதியிலுள்ள ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். அவர் வெகு நன்றாக ஆராதித்தார். 30-1-54 இரவு அங்கிருந்து புறப்பட்டு 'ராமவிலாஸ்' ஸ்ரீ கே. நரஸிம்ஹஅய்யங்கார், வக்கீல் ஸ்ரீதேசிகாசாரியர் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். அந்த ஸ்வாமிகள் 31-1-54 ஸ்ரீ மாலோலனை வெகு விமர்சையாக ஆராதித்தனர். இவ்வூரிலுள்ள எல்லா வைதிக லௌகிக ப்ரமுகர்களும் பக்திமான்களாக இருக்கிறார்கள். ப்ராம்மணேதர ஜாதியினரும் ஸ்த்ரீகளும் மிகபக்திச்ரத்தையுடையவர்களாயிருக்கிறார்கள் அன்று ஸாயங்காலம் 'ஸனாதன தர்மம்' என்ற விஷயத்தைப்பற்றி ஸ்ரீ அழகியசிங்கர் வெகு நேர்த்தியாக ஓர் உபன்யாஸம் செய்தாயிற்று. 31-1-54 இரவு அங்கிருந்து ஸ்ரீமான் பாஷ்யமய்யங்கார் பங்களாவிற்கு எழுந்தருளினார். இவ்விடத்திலேயே கம்மவார் அச்சுக்கூடம் ஸ்ரீ க்ருஷ்ணஸாமிநாயுடு என்பவர் ஸ்ரீமாலோலனை வெகு பக்தியுடன் விமர்சையாக ஆராதித்தார். 2-2-54 ல் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரம் மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. 10 தினங்களாக நடந்து வந்த வேத, ப்ரபந்த புராண பாராயணங்கள் வெகு கம்பீரமாக முடிவடைந்தது. மாலோல வித்வத் ஸதஸ்ஸுக்கும் அநேக பண்டிதர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடைய வாக்யார்த்தங்களைக் கேட்டு ஸ்ரீ அழகியசிங்கர் ஆனந்தித்தாயிற்று. அன்றைய தினம் ஸ்ரீ பாஷ்யமய்யங்கார் ஸ்ரீ பி. எஸ் நாராயணஐயங்கார் ஸ்ரீ வி. ஸ்ரீநிவாஸஐயங்கார் முதலிய ப்ரமுகர்கள் ஸ்ரீ மாலோலனை ஆராதித்தார்கள். அன்று பகல் 2 மணிக்கு ஸ்ரீமதழகியசிங்கர் ஸதஸ்ஸில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கும் பாராயணத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கும் மார்க்க வ்யயத்துடன் யதோசிதமான ஸம்பாவனை பண்ணியாயிற்று. அன்றிரவே அங்கிருந்து புறப்பட்டு ஸலவன் வீதியிலுள்ள ஸ்ரீ நரஸிம்ஹஅய்யங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. அவரால் வெகு விமர்சையாக ஆராதிக்கப்பட்டு அங்கிருந்து 3-2-54 இரவு 5 மைல் தூரமுள்ள சிங்காநல்லூருக்கு எழுந்தருளினார். அங்கு த்ரிவிக்ரமன் ஸந்நிதியில் ஸ்ரீமாலோலன் வீற்றிருந்தார். அவ்வூரில் நல்ல ப்ரமுகர்களான த்ரிவிக்ரம அய்யர் நரஸிம்ஹ அய்யர் வாத்யார் க்ருஷ்ணஸாமி சாஸ்த்ரி முதலியவர்கள் வெகு விமர்சையாக ஆராதித்தார்கள். த்ரிவிக்ரமன் 8 கைகளுடன் வெகு நன்றாகக் காட்சி அளிக்கிறார். இவ்வூர் வாஸிகள் அனைவரும் மிகவும் பக்தியுடையவர்களாக இருக்கிறார்கள். அன்றிரவு அங்கிருந்து புறப்பட்டு ராஜலக்ஷ்மி மில்லைச் சேர்ந்த பங்களாவிற்கு எழுந்தருளினார். அந்த மில்லுக்கு சொந்தக்காரியும் காலம் சென்ற ஸ்ரீரங்கஸாமி நாயுடுவின் பத்னியுமான ரங்கனாயகி அம்மாள் அழகியசிங்கர் திருவடிகளில் ஆச்ரயித்து மாலோலனை வெகு நன்றாக ஆராதித்தார்கள். அவளைச் சேர்ந்த பந்துக்கள் அனைவரும் பக்திச்ரத்தையுடையவர்களாக இருக்கிறார்கள். 5-2-54 இரவு அங்கிருந்து புறப்பட்டு ஸலவன் வீதியி

(84– வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வளவால் உலகத்தில் ராக்ஷஸ பிஶாசோபத்ரவங்கள் உள்ளனவாகக்கூறுவதும் உண்மை. அநுபவிப்பவர்களின் ஜன்மாந்தர கர்மவசத்தால் அவரவர்களுக்கு அவ்வுபத்ரவம் உண்டாவதும் உண்மை. ஆதலின் அவற்றிற்கு அவ்வப்போதோ. சில ஸமயங்களில் அவை ஏற்படும் முன்னமேயோ ஜோதிஷத்தைக் கொண்டறிந்து பரிஹாரங்கள் செய்ய வேண்டுவதும் அவச்யமே. அப்படிப்பட்ட பரிஹாரங்கள் செய்தால் அவற்றின் தாரதம்யத்திற்கீடாக அவ்வுபத்ரவங்கள் முற்றிலும் நீங்கவோ அல்லது சில பாகங்கள் நீங்கவோ செய்யும் என்பதெல்லாம் லோகாநுபவத்தைக் கொண்டும் புராதன கதைகளைக் கொண்டும் நன்கு புலனாகிறது.

லுள்ள ஸ்ரீநரஸிம்ஹ அய்யங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். ஸ்ரீமான் ரத்ன சபாபதி முதலியார் என்பவர் மிகவும் பக்தியிடன் வெகு நன்றாக ஆராதித்தார். அங்கிருந்து இரவு அவ்விடத்தைவிட்டுப்புறப்பட்டு ப்ராஹ்மண அக்ரஹாரத்திலுள்ள ஹிண்டு ஏஜன்ஸி ஸ்ரீ ராஜகோபாலாசாரியார்க்ருஹத்திற்கெழுந்தருளினார். அந்த ஸ்வாமி மிகவும் நன்றாக ஆராதித்தார். 8–2–54 ல் அவ்விடத்திலேயே ஸ்ரீமான். எஸ். எம். பொன்னுசாமி செட்டியார் என்பவர் வெகு பக்தியுடன் ஆராதித்தார். இவ்வூரில் எல்லா ஜாதியினரும் மிகவும் பக்திச்ரத்தையுடன் இருக்கிறார்கள். தங்கள்ஊரைவிட்டு ஸ்ரீ மாலோலன் எழுந்தருளுவதற்கு இஷ்டப்படவேயில்லை. அன்றிரவே ஸ்ரீ அழகியசிங்கர் பாலக்காடு எள்ளுமபிப்ராயத்துடன்புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள சாவடிக்த எழுந்தருளினார். கோயம்புத்தூரில் 109 பேருக்கு ஸமாச்ரயணமும் 63 பேருக்கு சரணாகதியும் நடந்தது. சாவடியில் ஒரு ஸத்திரத்தில் தங்கியிருந்தார். நடுந்தெருவு ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஆராதித்தார். அங்கிருந்து 12 மைல் தூரமுள்ள கஞ்சிக்கூடுக்கு எழுந்தருளினார். அங்கு மிக விசாலமான ஒரு ஸத்திரத்தில் ஸ்ரீமாலோலன் எழுந்தருளியிருந்தார். ஸத்திரத்திற்கு சேர்ந்தாப்போல் ஒரு குளம் மிகவும் நன்றாக அமைந்திருக்கிறது. ஸ்ரீ மூர்த்திஐயர் என்பவர் உசிதமாக ஆராதித்தார். அங்கிருந்து 10-2-54 பகல் 1 மணிக்த புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள பாலக்காட்டைச் சேர்ந்த திருநல்லாய் (திருவாக்கடவு) என்ற க்ராமத்திற்கு எழுந்தருளினார். இவ்வூரில்ப்ரதிக்ருஹத்திலும் வாழைமரம் மாவலைத் தோரணம் கட்டி ஸ்ரீமதழகியசிங்கரை எதிர்கொண்டு வரவேற்றனர். மிகவும் பக்தியுடன் யதாசக்தி ஆராதித்தார்கள். ஸ்ரீ ராமநாத அய்யங்கார் க்ருஹத்தில் ஸ்ரீ மாலோலன் எழுந்தருளியிருந்தார். இவ்வூரில் 2 தினங்கள் தங்கியிருந்தார். 11–2–54 காலை 10 மணிக்கு அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஒரு மனிதன் ‘வைஷ்ணவனாவது எப்படி’ என்கிற விஷயத்தைப் பற்றி ஸ்ரீ அழகியசிங்கர் மிகவும் நன்றாக உபன்யஸித்தாயிற்று. அவ்வூர் வாஸிகள் நாங்கள் ஸ்ரீ ஸந்நிதிசிஷ்யர்களாயிருந்தும் மாலோலன் எங்களூரில் எழுந்தருளி ஸேவைஸாதிக்கவில்லை. ‘இந்த குறை ஸ்ரீ அழகியசிங்கராநுக்ரஹத்தால் நீங்கப்பெற்றோம் என்று ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் தங்களுடைய அனந்த ப்ரணாமங்களை ஸமர்ப்பித்தார்கள். ஸ்ரீ ராமநாத அய்யர், ஸ்ரீ கோவிந்த அய்யர், ஸ்ரீ சேஷ அய்யர் முதலானவர்கள் ஸமாச்ரயணம் பண்ணிக்கொண்டார்கள். 12-2-54 இரவு அங்கிருந்து புறப்பட்டு 2 மைல் தூரமுள்ளபள்ளிபுரம் க்ராமத்திற்கு எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் மிகவும் உத்ஸாஹத்துடன் மாலோலனையும் ஸ்ரீமதழகியசிங்கரையும் வரவேற்றார்கள். ஸ்ரீ மாலோலன் பி. வி. ஈச்வர அய்யர் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். ஸ்ரீ ரங்க அய்யர் ஸ்ரீ ஈச்வர அய்யர் முதலியவர்கள் ஸ்ரீ மாலோலனை ஆராதித்தார்கள். 15-2-54 காலை 9 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் இவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க பஞ்சஸம்ஸ்காரம் பண்ணிக்கொள்ளவேண்டிய அவச்யத்தைப் பற்றியும் ஊர்த்வபுண்ட்ர தாரணத்தைப்பற்றியும் உபந்யஸித்தாயிற்று. அன்றிரவே ஸ்ரீ த்ரிவிக்ரம அய்யர் க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. அவர் மிகவும் நன்றாக ஆராதித்தார். 16-2–54 இரவு ஆதித்யபுரத்திலுள்ள க்ருஷ்ண அய்யர் க்ருஹத்திற்கு எழுந்தருளினார். ஸ்ரீ க்ருஷ்ண அய்யரும் அவர் தம்பிகளும் சேர்ந்து ஆராதித்தார்கள். 17-2-54 இரவு பள்ளிபுரத்திலுள்ள வெங்கடசுப்ரமண்ய ஐய்யர் (சாமுகுட்டி) க்ருஹத்திற்கு எழுந்தருளினார். அவர் மிகவும் நன்றாக ஆராதித்தார். 18–2–54 ல் 42—வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமதழகியசிங்கரின் முதல் வருஷ ஆராதனம் 6 தினங்களும் வேத, ப்ரபந்த, புராணபாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு நடந்துவந்தது சாற்றுமுறையுடன் ஸ்ரீமதழகியசிங்கரால் மிகவும் விமர்சையாக நடத்தப்பட்டது. 20–2–54 இரவு அங்கிருந்து 3 மைல் தூரமுள்ள கொடுந்தரப்பள்ளிக்கு எழுந்தருளியாயிற்று. அவ்விடத்தில் ஸ்ரீசுப்ரமண்ய அய்யர் க்ருஹத்திற்கெழுந்தருளியாயிற்று. அவர் மிகவும் நன்றாக ஆராதித்தார். 22-2–54 இரவு அங்கிருந்து புறப்பட்டு மறுபடியும் பள்ளிபுரம் ஸ்ரீபி.வி.ஈச்வர அய்யர் க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. 28-2–54 இரவு ஸ்ரீ ரங்கய்யர்

ஸ்ரீ:

விஜய ஞூ தை மீ 20 உ (2-2-54) செவ்வாய்க்கிழமை
ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டத்தில்
மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த
ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர
மஹாதேசிகனுடைய
வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவ தினத்தில்,
ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய்
எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன்
விஷயமாக சூட்டப் பெற்ற

சொன் மாலை

1 சீரோங்கு பொன்னியெனுந் தெய்வ நதிதவழும்
ஏரோங்கு நாடென் றியம்புமுயர்—பேரோங்கு
2 சோணாட்டி லுள்ளபல தொல்பதிக ளிற்சிறந்து
சேணாட ரேத்துஞ் சிறப்புடைத்தாய்—நாணாளும்
3 வந்தடைந்தோர் தங்கள் வறுமையொடு வெப்பிணிகள்
சிந்த விளங்குகின்ற சீர்த்தலமாய்—அந்தணர்கள்
4 ஓதி மகிழ்கின்ற வோங்கு மொருநான்கு
வேத வொலிமாறு மேன்மைத்தாய்க்—கோதிலாச்
5 செந்நெற் கதிர்கள் செழுங்கவரி போலசைக்
கன்னற் பயிரோங்குங் காட்சியதாய்—மன்னுங்
6 கதிரோ னொளிநுழையாக் காவனங்கள் மிக்கு
மதிதோயும் கோயில் மதில்சூழ்—பதியாகும்
7 தேவனூர் விளாகமதில் திருநெடுமா லடிபரவும்
நாவார் நிலத்தேவர் மேன்குலத்தே—அவதரித்தோன்
8 ஆதி மறைநூலும் ஆன்றதமிழ் நூல்பலவும்
ஓதி யறிந்த வுணர்வுடையோன்—தீதில்குணச்
9 சீரார் சீரங்க சடகோப மாமுனிவன்
ஏரா ரகோபில மாண்மடத்து—நேரில்லா
10 ஆசா னழகிய சிங்கனடித் தொண்டுபூண்டு
பாசானு பந்தமாம் பற்றறவே—மேசால்
11 சதுட்டயங்க ளான சமயநூல் கள்கேட்டு
யதியாச் சிரமு மேன்றேன்—பதியில்மிகும்
12 சென்னை முதலாச் சீர்மலிந்த நாடெல்லாம்
நன்னர்ச்சஞ் சாரஞ்செய் தெல்லார்க்கும்—தொன்னெடுமால்
13 பத்தி தழைப்பப் பரமமெய்ஞ் ஞானமதை
வித்தி யருள்புரியும் வித்தகனும்—மெய்த்தவத்தோன்
14 தன்னலம் தற்புகழ்ச்சி தாங்கடந்தோன் நற்பொறையோன்
இன்மொழி வாய்ந்த வியல்புடையோன்—மன்னுமுயர்
15 சீலன் சீவீர ராகவமா தேசிகன்
ஞாலந் தனிலே நனிவாழி —மேலுமினி
16 வாழி மறைநான்கும் வாழி வளரறங்கள்
வாழி தமிழாம் மடமயிலும்—வாழியரோ
17 எங்கள் மால்சீரை யெடுத்தேத்தும் நல்லோர்தம்
பொங்குபுக ழென்றும் பொலிந்து.

ஸ்ரீ:

பகவதவதார ப்ரயோஜனம்

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன் பரம க்ருபையால் சேதனர்களின் உஜ்ஜீவனார்த்தமாகராம க்ருஷ்ணாதி அவதாரங்களைச் செய்தருளி அநுஷ்டான முகத்தினாலும் உபதேச முகத்தினாலும் (சேதனர்களுக்கு எக்காலத்திலும் பயன் படும்படி) அதிமாநுஷ கார்யங்களைச் செய்தருளி அவதாரஸமாப்தியைச்செய்கிறான். இப்படித் தான் அவதரிப்பதற்கு காரணத்தை கீதையில் [**4** அத்யாயம் **7** ச்லோகம்]

'यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदाऽत्मानं सृजाम्यहम् ॥'

'ஹே அர்ஜுன! எப்பொழுது உலகத்தில் தர்மத்திற்குஹானி ஏற்படுகிறதோ அதர்மத்திற்கு எழுச்சி உண்டாகிறதோ அப்பொழுது நான் அவதரிக்கிறேன்' என்று அவதாரகாலத்தை அருளிச் செய்து தன் அவதாரப்ரயோஜநத்தை மேல் ச்லோகத்தினால் காட்டுகிறார்.

'परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे' ॥

'ஸாதுக்களின் ரக்ஷணத்தின் பொருட்டும் துஷ்டர்களின் நாசத்தின் பொருட்டும் தர்மஸ்தாபநத்தின் பொருட்டும் நான் யுகம் தோறும் அவதரிக்கிறேன்' என்பது மேலே காட்டிய ச்லோகத்தின் கருத்து. இதனால் பகவானுடைய அவதாரத்திற்கு ப்ரயோஜநம் ஸாதுக்களின் ரக்ஷணமும், துஷ்டர்களின் நாசமும் என்று தோன்றினாலும் ஸ்ரீபாஷ்யகாரர் அந்தராதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் 'ஸாது பரித்ராணம்தான் முக்ய ப்ரயோஜனம். துஷ்டர்களின் நாசரூப ப்ரயோஜனம் ஆநுஷங்கிகம்' என்று அருளிச் செய்தார். அவதாரத்திற்கு ப்ரமாணமாக **'अजायमानो बहुधा विजायते'** [கர்ம ஹேதுகமான உத்பத்தி பகவானுக்குஇல்லையாயினும் தன்இச்சாமூலமாக அநேகவவதாரங்களைச்செய்கிறார்.]என்கிறச்ருதியையும் **'अजोपिसन्नव्ययात्मा'** என்கிறஸ்ம்ருதியையும், [**अजोपि**-உத்பத்தியில்லாதவனாயினும் **संभवामि**-அவதரிக்கிறேன்) உதாஹரித்து பகவானுடைய அவதாரத்திற்கு ப்ரயோஜனத்தையும் **'परित्राणाय'** என்கிற ச்லோகத்தினால் விளக்கியருளும் ஸமயத்தில் **'साधवः उपासकाः तत्परित्राणमेवो द्देश्यम् आनुषङ्गिकस्तु दुष्कृतां विनाशः सङ्कल्पमात्रेणाऽपि तदुपपत्तेः'** என்று அருளிச் செய்தார். துஷ்டர்களின் நாசமானது அவதாரத்திற்கு முக்ய ப்ரயோஜனமல்ல. ஸாதுக்களின்பரித்ராணமே முக்ய ப்ரயோஜனம். துஷ்டர்களின் நாசம் பரமபதத்திலிருந்துகொண்டே **'दुष्टास्सर्वे नष्टा भवन्तु'** என்று பகவான் ஸங்கல்பித்த மாத்திரத்திலேயே உண்டாகிவிடும் என்று ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவுள்ளம் என்று ஏற்படுகிறது. ஸ்ரீமத்ராமாயணாதிகளிலும் பகவானுடைய அவதார ப்ரயோஜனம் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. (அயோ ஸர்–1 ச்–7)

'सहि देवैरुदीर्णस्य रावणस्य वधार्थिभिः ।
अर्थितो मानुषे लोके जज्ञेविष्णुस्सनातनः' ॥

என்பதும் அவைகளில் ஒன்று. அதிகர்விஷ்டனான ராவணனுடைய நாசத்தை விரும்புகிற தேவர்களால் அவனைக் கொல்லுவதற்காக விஷ்ணுவானவர் ப்ரார்த்திக்கப்பட்டு ராமனாக மனுஷ்யலோகத்தில் அவதரித்தார் என்பது மேல் குறிப்பிட்டுள்ள ச்லோகத்தின் கருத்து. இதனால் அநிஷ்ட நிவ்ருத்திபூர்வக இஷ்ட ப்ராப்தி ஏற்படுகிறது. ஆகையால் தேவர்களுடையரக்ஷணம்தான் முக்யமென்றும்ராவண வதம் ஆநுஷங்கிகம் என்றும் தோன்றுகிறது. இப்படியே ந்ருஸிம்ஹாவதார விஷயத்தில் பக்தனான ப்ரஹ்லாதன் ரக்ஷணத்திற்காகவே அவதரித்ததும் ஹிரண்யகசிபுவின் நாசம் ஆநுஷங்கிகம் என்றும், தேசிகன் அநுக்ரஹித்த **'भक्तस्य दानवशिशोः परिपालनाय भद्रांन्रृसिंहकुहनामधिजग्मुषस्ते'** என்ற ச்லோகத்தினால் அறிகிறோம். போஜகவியும் **'प्रह्लादस्य व्यसनममितंदैत्यवर्गस्य दंभम्'** என்று சொல்லுகிறான். இப்படியேக்ருஷ்ணாவதாரத்திலும் **'प्रभूतविबुधद्विषद्भरणखिन्नविश्वंभरा भरापनयनच्छला त्वमवतार्यलक्ष्मी**

धरम्' என்றும் (தயாஶதகத்தில்) அறியலாம். ஆகவே பகவானுடைய அவதாரத்திற்கு முக்ய ப்ரயோஜனம் ஸாதுக்களின் ரக்ஷணமே. துஷ்டர்களின் விநாஶம் ஆநுஷங்கிகம் என்பதையும் துஷ்டர்களின் நாசம் ஸங்கல்பமாத்திரத்தினுல் உண்டாகலாமென்பதையும் ஸ்ரீமத் ராமாயணத்தைக் கொண்டே எளிதில் அறியலாம். விபீஷண ஶரணுகதி ப்ரகரணத்தில் விபீஷணன் ஶரணுகதி செய்தவுடனே அவனை அங்கீகரிக்கும் விஷயமாக ஒரு மந்திராலோசனை நடந்ததாக ஸ்ரீமத்ராமாயண யுத்தகாண்டத்தில் ஒரு ப்ரகரணம் காண்கிறேம். அதில் ஸுக்ரீவ மஹாராஜர் விபீஷணனை அங்கீகரிக்கும் விஷயத்தில் ஸம்மதி குறைவை காட்ட பெருமாள் உடனே ஸுக்ரீவ மஹாராஜனுக்கு தெளிவு புகட்ட திருவுள்ளம்பற்றி

'पिशाचान्दानवान्यक्षान्पृथिव्यां चैव राक्षसान् ।
अङ्गुल्यग्रेण तान्हन्यामिच्छन्हरिगणेश्वर' ॥

என்று ஒரு ச்லோகம் ஸாதித்திருக்கிறுர். அதில்ஸங்கல்பத்தினுலேயே துஷ்க்ருத்விநாசம் செய்யமுடியுமென்பதை **इच्छन्** என்கிற பதத்தினுல் அறிகிறேம். 'ஹேஸுக்ரீவமஹாராஜனே! நான் இச்சித்தனேயாகில் இந்த ராக்ஷஸர் முதலியவர்களை ஆயுதமில்லாமலேயே அங்குளியின் நுனியினுலேயே கொல்லும் சக்தியுடையவனுவேன்' என்று ச்லோகத்தின் கருத்து. **'इच्छा'** என்பது ஸங்கல்பம். ஆகையால் துஷ்க்ருத் விநாசம் ஸங்கல்ப ஸாத்யம் என்று தேறுகிறது. இப்படிப்பெருமாள் தான் இருக்குமிடத்திலிருந்துக் கொண்டே (துஷ்டர்கள் இருக்குமிடத்திற்குச் செல்லாமல் துஷ்டர்களைக் கொன்று இருக்கிறுர் என்று கவனித்தால், ஸமுத்திரராஜன் தான் செய்த ப்ரபத்திக்கு இணங்கி வழி கொடுக்காததைக் கண்டு பெருமாள் அவனை நாசம்செய்யத் திருவுள்ளம் பற்றி, லக்ஷ்மணனை நோக்கி **'चापमानय सौमित्रे** [லக்ஷ்மணுவில்லேக்கொண்டுவா] என்று நியமிக்க அவனும் வில்லை கொண்டுவர இதை கவனித்த ஸமுத்திராஜனும் வில்லும் கையுமான பெருமாளைக் கண்டு பயந்து நடுங்கி ஓடிவந்து பெருமாளை, தன்னைக் காப்பாற்றும்படி ஶரணுகதி செய்ய பெருமாளும் இந்த அம்பை (வில்லில் தொடுத்த அம்பை) ப்ரயோகிக்காமல் இருப்பது முடியாத காரியமாதலால் இக்கரையிலிருந்து கொண்டே **'द्रुम कुल्यं'** (த்ரும குல்யம்) என்கிற துஷ்டர்களின் நிவாஸஸ்தலத்தைக் குறித்து ப்ரயோகித்தாரென்பதைப் பார்த்தால் இவ்வர்த்தம் நன்கு புலப்படுகிறது. ஆகையால் பெருமாள் பரமபதத்திலிருந்தே 'லங்கையானது ராவணுதி ஸகல துஷ்டராக்ஷஸர்கூடியிருக்கும் ஸமயத்தில் நாசமடையவேண்டியது' என்று ஸங்கல்பித்தவாறே நாசம்செய்ய சக்தியிருந்தபோதிலும் பெருமாள் இங்கு அவதரித்ததற்குக் காரணம் ஸ்ரீபாஷ்யகாரர் அருளியபடி ஸாது பரித்ராணமே முக்ய ப்ரயோஜனம் என்று தேறுகிறது. இங்கு ஸாது பரித்ராணம் என்பது ஸங்கல்பத்தினுல் **(साधवः निरुपद्रवाः भवन्तु)** ஸாத்யமாகாததா, இதற்காக அவதரிப்பானேன் என்று ஶங்கை உதிக்கக் கூடும். இதற்கும் ஸமாதானம் ஸ்ரீபாஷ்யகாரர் கீதாபாஷ்யத்தில் **'परित्राणाय'** என்கிற ச்லோகவ்யாக்யானத்தில் அழகாக அருளிச் செய்து இருக்கிறுர்.

'साधवः- उक्त लक्षण धर्मशीलाः वैष्णवाग्रेसराः मत्समाश्रयणे प्रवृत्ताः मन्नामकर्मस्वरूपाणां वाङ्मनसागोचरतया मद्दर्शनेनविना स्वात्मधारणपोषणादिकमलभमानाः क्षणमात्रकालं कल्पसहस्रम वानाः प्रशिथिलसर्वगात्राभवेयुरिति मत्स्वरूपचेष्टितावलोकनालपादि दानेन तेषांपरित्राणाय' என்பதே மேலே சொல்லப்பட்ட ஸ்ரீஸூக்தி. ஸாதுக்கள்என்ருல் இப்படிப்பட்டவர்கள். எவர்என்னையடைவதில் ப்ரவ்ருத்தித்தவர்களாய் என்னுடைய, பெயர், கர்ம, ஸ்வரூபம் இவைகள் வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் விஷயமாகாததாகையாலே என்னைப் பார்க்காமல் போனுல் ஸ்வாத்ம தாரணத்தையோ, போஷணத்தையோ அடையமாட்டாதவர்களாய் க்ஷணமாத்திரகாலவிரஹத்தை கல்ப ஸஹஸ்ரம் பிரிந்தவர்களாக நினைத்து உருகி இளைத்த ஶரீரத்தை உடையவர்களாக ஆவார்களோ அப்படிப்பட்ட ஸாதுக்களின் ரக்ஷணத்தின் பொருட்டே பகவான் அவதரிக்கிறுன்' என்பது மேல்காட்டியவாக்யங்களின் ஸங்க்ரஹமான பொருள். (விளக்கம் தாத்பர்யசந்த்ரிகையில் கண்டு கொள்வது.) ஆகவே பகவானை அடைய விரும்பும் உபாஸகர்கள் இந்தலோகத்திலேயே பகவானை அணைத்து அவனுடன் ஸஹவாஸ ஸல்லாபங்கள் செய்ய ஆசைப்பட்டால் இது ஸங்கல்ப ஸாத்யமாகுமா? ஸாதுக்கள் 'பகவான்' எனக்கு புத்திரனுக பிறக்க வேண்டும்' என்று ஆசைப்பட்டால் அது ஸங்கல்ப ஸாத்யமாகுமா? ஆகையால் பகவானுடைய அவதாரத்திற்கு ப்ரயோஜனம் ஸாது ஸம்ரக்ஷணமாத்திரமே. துஷ்க்ருத் விநாசம் ஆநுஷங்கிகம். இந்த ப்ரயோஜனம் பகவானுடைய எல்லா அவதாரங்களிலும் பரக்கக் காணலாம். பகவானுடைய அவதாரங்கள் அநேகங்

களாகஇருந்தபோதிலும் ஶாஸ்திரஜ்ஞர்களின் வ்யவஹாரத்தையிட்டு 5விதமாகப்பிரிக்கலாம். மற்றவைகளை இதில் அடைக்கலாம். 1 பரம், 2 வ்யூகம், 3 விபவம், 4 ஹார்த்தம், 5 அர்ச்சை என்று பகவானுடைய அவதாரங்கள் ஐந்து வகைப்படும். இந்த ப்ரகாரபேதம் விக்ரஹாம் சத்திலேயேவரும். ஆத்ம ஸ்வரூபத்திற்கு வராது. ஆத்மஸ்வரூபம் எல்லா வஸ்துக்களிலும் எக்காலத்திலும் ஒரே ரூபமாக இருக்கும்.

1 பரரூபம். இது நித்யஸூரிகளுக்கும் முக்தர்களுக்கும் ஸேவிக்கத்தக்கதாய் ஸ்ரீவைகுண்டத்தில் நித்யமான திவ்யமங்கள விக்ரஹாவதாரம். **'सव्यं पादं प्रसार्य'** என்பது இந்த திவ்யமங்கள விக்ரஹத்தைப் பற்றியதே.

2. வ்யூஹம். இது பரவாஸுதேவ ரூபத்திலிருந்து உண்டானது. வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்தன் என்று 4 ப்ரகாரமாக இருக்கும். இந்த வ்யூஹ விஷயமாக அநேக விசாரங்கள் (ரஹஸ்யத்ரயஸாரத்தில்) தத்வத்ரயசிந்தனுதிகாரத்தில் காணலாம்.

3. ராம க்ருஷ்ணுதி அவதாரங்கள் விபவாவதாரங்கள்.

4. ஹார்த்தம். இதை அந்தர்யாம்யவதாரம் என்று ஶாஸ்த்ரஜ்ஞர்கள் வ்யவஹரிப்பார்கள். எல்லோருடைய ஹ்ருதயங்களில் பரரூபத்தின் பரிணாமமடியாக உண்டானஸூக்ஷ்மமாக இருக்கும் ரூபத்தின் நிலை. (இதனுல் உபாஸநத்தில் யோக்யதையில்லாத திர்யகாதிகளில் இந்த ரூபமில்லை என்று அறியலாம்.)

5. அர்ச்சாவதாரம். 'ஸ்வயம் வ்யக்தம் ஆர்ஷம்'முதலியவிடங்களிலும்ஆஶ்ரிதர்களுக்காக அவர்கள் அபேக்ஷிக்கிறபடியே எழுந்தருளப் பண்ணும் பிம்பங்களிலே வந்து ஸேவைஸாதிக்கும் நிலை. இந்த அர்ச்சாவதாரரூபத்திற்கு பகவதநுப்ரவேஶத்தினுல்ஶுபாஶ்ரயத்வமும் (பாபத்தைக் கழிக்கும் தன்மையும், ஆஶ்ரயிக்கத் தகுந்த தன்மையும்) ஷாட்குண்ய பூர்த்தியும் [ஜ்ஞாந, பல, ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்கள்] உண்டு

'अर्चकस्य तपोयोगात्पूजायाश्चातिशायनात् ।
आभिरूप्याच्च बिंबस्य नित्यंसन्निहितो हरिः॥'

என்றும் ப்ரகரணங்களிலே சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தின் உண்மைப் பொருளை ஸ்ரீ மதஹோபிலமடத்தில்அர்ச்சாரூபியாய்ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனிடத்தில் பரக்கக் காணலாம். இப்பெருமாள் திருமங்கை மன்னனுல் மங்களாஶாஸனம் செய்யப்பட்ட சிங்கவேழ் குன்றம் என்கிற திவ்யதேஶத்தில் எழுந்தருளியிருந்தவர். இவர் [இந்தவர்ச்சா திருமேனியுடையவர்] அவதாரத்திற்கு முக்ய ப்ரயோஜனமான ஸாதுஸம்ரக்ஷணத்தைச்செய்யும் அழகு மற்றெங்கும் இல்லை. அதாவது க்ராமம்தோறும் க்ருஹம்தோறும் எழுந்தருளி ஆஶ்ரிதர்களுக்கு ஸமாஶ்ரயண பரந்யாஸாதிகளை அநுக்ரஹித்துக்கொண்டு லோகோஜ்ஜீவனுர்த்தமாக ஸேவை ஸாதிக்கிறுர். இவர் விஷயத்தில் **'अर्चकस्य तपोयोगात्'** என்கிற அம்சம் எவ்வளவு அழகாக பொருந்தியிருக்கிறது. ஸ்ரீ ஆதிவண்ஶடகோப ஸ்வாமி முதல் இவரை ஆராதிக்கும்[அர்சா-பூஜா-ஆராதனம்] ஸ்வாமிகளின் தபஸ்ஸை யான்எழுதுவது ஸாஹஸமே.

பூஜையின் மேன்மை [**पूजायाश्चातिशायनात्**] இப் பெருமாள் கண்டு களிக்கும் திருவாராதந ப்ரக்ரியை அதிவிலக்ஷணமானது அவன் 100 படி ப்ரஸாதங்களையும் அதற்குத்தகுந்த பக்ஷணவ்யஞ்ஜநாதிகளையும் உண்டு உலக முண்ட பெருவாயா என்று ஆழ்வார்களின் வாக்கை ஜ்ஞாபகப்படுத்துகிறுன். **'आभिरूप्याच्च बिंबस्य'** என்பதும் இங்கு இப்பெருமாள் பக்கலில் பொருந்தும். ஒரு திருக்கண் பிராட்டியினிடத்திலும் மற்றொரு திருக்கண் ஆஶ்ரிதர் விஷயத்திலும் கடாக்ஷித்துக்கொண்டு ஸேவை ஸாதிக்கும் அழகு வாசாமகோசரம். 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி இருந்த ஸ்ரீ அழகியசிங்கர் இவ்வெம்பெருமான முகில் ஈடுபட்டு ப்ரதிதினம் [தன் விபவதசையில்] கண்ணும் கண்ணீருமாக 2 நாழி அவகாசம் கண்டு களித்து க்ருதார்த்தராகி எழுந்தருளியாய் இருந்தபடி. இப்படிப்பட்ட இடங்களில் **'नित्यं सन्निहितो हरिः'** என்பது மறைக்க முடியாத உண்மை. ஆகவே இப்படிப்பட்ட அவதார ப்ரயோஜனத்தை [ஸாதுரக்ஷணத்தை]பகவானுடையவநுப்ரவேசாவதாரமான ஆசார்யன் விஷயத்திலும் பரக்கக் காணலாம். அநுப்ரவேஶாவதாரமாவது பகவான் அந்தந்த ஜீவன்களை தன் விக்ரஹத்தினுலாவது ஶக்தியினுலாவது அதிஷ்டானம் பண்ணி அவர்களை நியமனம் பண்ணுதல். **'अनुप्रविश्य' कुरुते** என்பதும் இதுவே. ஆகையால்தான் நம்மாசார்யர்களை ஸ்ரீஅழகியசிங்கர் என்றே பெரியோர்கள் வ்யவஹரிக்கிறுர்கள்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஜய ஸூ பங்குனி மீ 1954 ஸூ மார்ச்–ஏப்ரல் மீ

[உத்தராயணம்; சிசிர ருது; மீன மீ]

16–3–54	3உ	செவ்வாய்க்கிழமை	அதிதி.
17–3–54	4உ	புதன்கிழமை	த்ரயோதசி திதி.
19–3–54	6உ	வெள்ளிக்கிழமை	பங்குனி உத்திரம்.
30–3–54	17உ	செவ்வாய்க்கிழமை	ஸர்வ ஏகாதசி.
31–3–54	18உ	புதன் கிழமை	ஹரிவாஸரம் 5. 11.
2–4–54	20உ	வெள்ளிக்கிழமை	போதாயன அமாவாஸ்யை.
3–4–54	21உ	சனிக்கிழமை	● அமாவாஸ்யை.
4–4–54	22உ	ஞாயிற்றுக்கிழமை	யுகாதி பண்டிகை.
5–4–54	23உ	திங்கட்கிழமை	த்விதீயை–த்ருதீயை திதித்வயம்.
11–4–54	29உ	ஞாயிற்றுக்கிழமை	ஸ்ரீராம நவமி.
12–4–54	30உ	திங்கட்கிழமை	மீன சுக்ல தசமி திதி.
13–4–54	ஜய ஸூ சித்திரை மீ 1உ	செவ்வாய்க்கிழமை	சூன்ய திதி; மேஷ ரவி 28—57 தமிழ்-வருஷப்பிறப்பு (இன்று ஸங்க்ரமண—தர்ப்பணம்)

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைதவேதாந்தகோசம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திவ்ய நியமநத்தின்பேரில் ப்ரசுரிக்கப்பட்டது.

ஸம்பாதகர்:— ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசாரியர். M. O. L. (D. T. தாதாசாரியர்)

விலை ரூபாய் 20—0—0.

கிடைக்குமிடம்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ், திருவுள்ளூர்.

இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு மிகவும் முக்யமானது. இதில் 107 புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட அனேக பதங்களுக்கு விசிஷ்டாத்வைத ரீதியில் அப்புத்தகங்களிலுள்ள வ்யாக்யாநப்படி அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. சுருங்கச்சொல்லின் இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு ஒரு நிகண்டு (அகராதி)வாகத் திகழ்கிறது என்னலாம். 374 பக்கங்கள் உள்ளன. 500 காபிகளே கைவசமிருப்பதால் இப்புஸ்தகத்தை விரும்புவோர்கள் முந்திக்கொள்ளவேணும். புஸ்தகம் நல்ல பயிண்டுடன் கூடியிருக்கிறது.

முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் கார்யங்களுடைய நிர்வாஹத்தில் நேர்ந்த சில மாறுதல்கள் காரணமாக ஏற்பட்ட விலாஸமாறுதல் கீழே கொடுக்கப்படுகிறது:-

N. Krishnamachariar,
Sri Nrisimhapria Office,
Sri Ahobila Mutt, Trivellore.

என். க்ருஷ்ணமாசாரியர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.

இனி சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேணும்.

The Manager,
Sri Nrisimhapria Office,
Sri Ahobila Mutt, Trivellore.

மானேஜர்,
ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்
ஸ்ரீ அஹோபில மடம், திருவள்ளூர்.

சந்தாதாரர்கள் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களை மேற்கண்ட விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லா கடிதப்போக்குவரத்துக்களும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும்.

* * * * *

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வ்யாஸங்கள், மற்ற விஷயங்கள், ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸங்கள் முதலியவை விஷயமான ஆக்ஷேபங்கள், ஸமாதானங்கள், அபிநந்தனங்கள் முதலியவைகள்மட்டும் கீழேகண்ட விலாஸத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

The Editor,
Sri Nrisimhapria,
Sri Ahobila Mutt,
Sanskrit College,
Madurantakam.
S. Rys.

ஸம்பாதகர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
ஸ்ரீ அஹோபிலமடம்,
ஸம்ஸ்க்ருத கலாசாலை,
மதுராந்தகம்.
S. Rys.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீஸாரபோதிநீ

முதல் பாகம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்கிற ஓர் அத்புத க்ரந்தரத்நத்தின் ஒளியாக விளங்கும் "ஸ்ரீஸாரபோதிநீ" என்கிற வ்யாக்யானம் ஸ்ரீ அஹோபிலமடத்தில்42-வதுபட்டத்தில்மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுலருளிச்செய்யப்பட்டது என்பது ஸர்வலோகவிதிதம். வஸி [illegible]மான இக் க்ரந்தம் விஜய வருஷம் தை மாதம் உத்திராடத்தன்று வெளியாகியிருக்கிறது. உயர்ந்த க்ளேஸ் பேபரில் அச்சிடப்பட்டது. 584 பக்கங்களுடன் கூடியது. இதன் விலை:—

1. புல்காலிகோ பயிண்டு புத்தகம்— ரூ 6-8-0
2. ஆப்காலிகோபயிண்டு புத்தகம்— ரூ 6-0-0
3. ராப்பர் பயிண்டு புத்தகம்— ரூ 5-8-0

அபேக்ஷிக்குமாஸ்திகர்களனைவரும் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு (பயிண்டின் விவரபூர்வமாக) எழுதி பெற்றுக்கொள்ளவும்.

1. ஸ்ரீகார்யம் ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபிலமடம்.
(Camp)..................

2. ஸ்ரீமாலோல முத்ராலயம்,
திருவள்ளூர்,
செங்கல்பட்டு ஜில்லா.

குறிப்பு:— ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு 8 அணு தள்ளி கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரை குறிப்பிட்டே அனுப்ப வேண்டும்.

புத்தகம்வேண்டியவர்கள் அதன் க்ரயத்தில் பாதியை முன்பணமாக அனுப்பி வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளவும். (பாக்கிங் & தபால் சிலவுகள் தனி)

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobila-Mutt Sanskrit College, Madurantakam.